Registered as a news paper.

பக்கங்கள்: பத்து

விலை: ரூபா 6.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

மலர் : 01 திருவள்ளுவர் ஆண்டு: 2034 ஆனி 04 ஆம் நாள், ஹிஜ்ரி 1425 ர.ஆகிர் 17 (19.06.2003) வியாழக்கிழமை இதழ்: 259

ஆசியாவின் நம்பர் 1 சீமேந்து

SLS 107 அங்கீகாரம் பெற்றது.
ISO 9002 தரம் பெற்றது.
BSS 12 - 1991 தரத்திற்கு அமைவானது.
இவை அனைத்தையும் கொண்ட உயர்தர சீமேந்து.

ரா ம் கோ

MADRAS CEMENTS LTD

RAMCO CEMENT

சீமேந்து

ரா ம் கோ

(சி-884)

## 'பொங்கு தமிழ்' நிகழ்வில் பங்கேற்க சகல தூதரகங்களுக்கும் அழைப்பு!

### சர்வதேச ஆதரவைத் திரட்ட நடவடிக்கை

யாழ்ப்பாணத்தில், அடுத்தவாரம் மிகவும் உணர்ச்சிபூர்வமாக நடைபெறவிருக்கும் 'பொங்கு தமிழ்' எழுச்சி நிகழ்வுக்கு, சர்வதேச சமூகத்தின் ஆதரவும் பெற்றுக்கொள்ளப்படவுள்ளது.

யாழ்.பல்கலைக்கழக சமூகம் ஏற்பாடு செய்திருக்கும் மேற்படி 'பொங்கு தமிழ்' எழுச்சி நிகழ்வுக்கு, சர்வதேச சமூகத்தின் ஆதரவைப் பெற்றுக்கொள்வதற்கான நடவடிக்கைகள் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

'பொங்கு தமிழ்' தொடர்பாக - கொழும்பிலுள்ள அனைத்து வெளிநாட்டுத் தூதரகங்களுக்கும் யாழ். பல்கலைக்கழக சமூகத்தினால் அழைப்புக் கடிதங்கள் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

மேலும் - சர்வதேச நிறுவனங்

(10 ஆம் பக்கம் பார்க்க)

## பருத்தித்துறை நகர்ப் பகுதி நேற்றுமாலை சுற்றிவளைப்பு!

### பொதுமக்கள் மீது கடும்சோதனை

பருத்தித்துறை நகரில், இராணுவத்தினர் திடீர் சுற்றிவளைப்பு மற்றும் தேடுதல் நடவடிக்கைகளை மேற்கொண்டனர்.

நேற்றுமாலை 4 மணியளவில் படையினரின் இத்திடீர் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

நான்கு இராணுவ வாகனங்களில் பருத்தித்துறை நகருக்குள் திடீரெனப் புகுந்த இராணுவத்தினர், அங்கு நின்ற பொதுமக்களைச் சோதனைக்குட்படுத்தினர். அடையாள அட்டைகள் பரிசோதிக்கப்பட்டன. அத்துடன் - பொதுமக்கள் உடற்சோதனைக்கும் உட்படுத்தப்பட்டனர். (10 ஆம் பக்கம் பார்க்க)

# இனியும் யுத்தநிறுத்த மீறல்களுக்கு புலிகள் மௌனம்காக்க மாட்டார்கள்

## கிளிநொச்சி வந்த நோர்வேத் தூதுவரிடம் தமிழ்ச்செல்வன் உறுதிபட எடுத்துரைப்பு!

(கிளிநொச்சி)

**சர்வதேசக் கடற்பரப்பில் விடுதலைப் புலிகளின் எண்ணெய்த்தாங்கிக் கப்பல், கடற்படையினரால் இடைமறிக்கப்பட்டு, மூழ்கடிக்கப்பட்ட சம்பவம் போன்று இனியும் யுத்தநிறுத்த மீறல்கள் நடப்பதை எக்காரணம் கொண்டும் அனுமதிக்க முடியாது எனவும்,**

**இவ்வாறான சம்பவங்களைப் பொறுத்துக்கொண்டு விடுதலைப் புலிகள் மௌனம் சாதிக்க மாட்டார்கள் எனவும் - விடுதலைப் புலிகளின் அரசியற்துறை பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன், நேற்று தன்னைச் சந்தித்த நோர்வேத் தூதுவரிடம் உறுதிபடத் தெரிவித்துள்ளார்.**

நேற்றுக் காலை 9.15 மணியளவில், கிளிநொச்சியை வந்தடைந்த நோர்வே தூதுவர் ஹான்ஸ் பிரட்ஸ்கர் மற்றும் தூதரகத்தின் இரண்டாவது செயலாளர் தோமஸ் ஆகியோர் - 9.45 மணியளவில், சமாதானச் செயலகத்தில் வைத்து - அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வனைச் சந்தித்துப் பேசினர்.

சுமார் ஒரு மணிநேரமாக இச்சந்திப்பு இடம்பெற்றது.

இச்சந்திப்பில் - தற்போதைய சமாதான முன்னெடுப்புக்கள் தொடர்பாகவும், அம்முயற்சிகளில் ஏற்பட்டுள்ள முட்டுக்கட்டைகளை நீக்குவது பற்றியும் கலந்துரையாடப்பட்டது.

(10 ஆம் பக்கம் பார்க்க)

## முப்படைத் தளபதிகளுடன் ஜனாதிபதி முக்கிய சந்திப்பு

வடக்கு - கிழக்கில் பாதுகாப்பு நிலைவரங்கள் தொடர்பாக, ஜனாதிபதி முப்படைகளின் தளபதிகளையும், வடக்கு - கிழக்கின் கட்டளைத் தளபதிகளையும் அழைத்து ஆராய்ந்துள்ளார்.

நேற்றுமாலை ஜனாதிபதி மாளிகையில் இந்தச்சந்திப்பு இடம்பெற்றது. போர்நிறுத்தம் என்ற போர்வையில் விடுதலைப் புலிகள், மறைமுகமாக நடவடிக்கைகளை மேற்கொள்வதாக, முப்படைத் தளபதிகளும், கட்டளைத் தளபதிகளும் ஜனாதிபதிக்கு அப்போது புகாரிட்டதாகவும் தெரியவருகிறது.

அவசரகாலச் சட்டம் அமுலில் இல்லாதமையால், விடுதலைப் புலிகள் மேற்கொள்ளும் சட்டவிரோத நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்த முடியவில்லையென்றும், தளபதிகள் ஜனாதிபதியிடம் கூறினர்.


போர்நிறுத்த உடன்படிக்கையின் மூலம், இராணுவத்தினருக்கு விதிக்கப்பட்டுள்ள தடைகள் காரணமாக, புலிகளின் அத்துமீறல்களைத் தடுக்க முடியாதிருப்பதாகவும் தளபதிகள் ஜனாதிபதியிடம் தெரிவித்தனர்.

இச்சந்திப்பில் பேசிய ஜனாதிபதி -

நாட்டினது இறைமை, ஒருமைப்பாடு, (10 ஆம் பக்கம் பார்க்க)



கிளிநொச்சியில் நடந்த, நோர்வேத் தூதுவர் - தமிழ்ச்செல்வன் சந்திப்பு.



'இனிய வாழ்வு' இல்லத்தில் மாணவர்களுடன் நோர்வேத் தூதுவர்.

## வட-கிழக்கில் உள்ளூராட்சி தேர்தல்; ஒத்திவைப்பதற்கு அரசு யோசனை!

### நீதிமன்றத் தீர்ப்பால் ரத்துச்செய்ய முடியாத நிலை

(கொழும்பு)

வடக்கு-கிழக்கு மாகாணங்களில் நடைபெறவிருந்த உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தலை ஒத்திவைப்பதற்கு அரசு ஆலோசித்து வருகிறது.

மேற்படி தேர்தலுக்காக, ஏற்கனவே தாக்கல் செய்யப்பட்ட வேட்புமனுக்களை ரத்துச்செய்வது அரசியல் யாப்புக்கு முரணானது என்று, உச்ச நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியிருப்பதை அடுத்து, அரசாங்கம் இவ்வாறு ஆலோசித்து வருகின்றது.

முன்னதாக - எதிர்வரும் 25 ஆம் திகதி மேற்படி தேர்தலை நடத்துவதற்கு திகதி தீர்மானிக்கப்பட்டிருந்தது.

இதேவேளை -

இந்தத் தேர்தல் குறித்த உச்ச நீதிமன்றத் தீர்ப்பு நேற்றைய தினம் வெளியாகியது.

(10 ஆம் பக்கம் பார்க்க)

## மீன்பிடிப் படகுகள் சகலவற்றிலும் 'ரடார்' எதிரொலிக்கருவி

(யாழ்ப்பாணம்)

வட - கிழக்கு பிராந்தியத்தில், மீன்பிடித் தொழிலில் ஈடுபடும் இயந்திரப் படகுகள் அனைத்திலும் ரடார் எதிரொலி சாதனத்தை உடனடியாகப் பொருத்தும்படி கண்டிப்பான உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

மேற்படி கடற்பிராந்தியத்தில், கடற்தொழிலில் ஈடுபடுகின்ற அனைத்து மீன்பிடிப் படகுகளையும் கடற்படையினர் இலகுவாக இனங்காண்பதற்கு வசதியாகவே, இச்சாதனத்தைப் பொருத்தும்படி உத்த

(10 ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளுடன் பேச்சை ஆரம்பிக்க நோர்வே, ஜப்பானிடம் உதவி!

### பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கேட்டார்


விடுதலைப் புலிகள் கோரியுள்ள இடைக்கால நிர்வாகம் பற்றி, புலிகளுடன் பேச்சுக்களை ஆரம்பிக்க உதவுமாறு, நோர்வே மற்றும் ஜப்பான் ஆகிய நாடுகளிடம் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கோரிக்கை விடுத்திருப்பதாக, இராஜதந்திர வட்டாரங்கள் தெரிவித்தன.

பிரதமரின் இந்த கோரிக்கையையடுத்து - ஜப்பானிய விசேட சமாதானத் தூதுவர் யசுசி அகாஷி, அடுத்த மாதம் கொழும்பு வரவுள்ளார்.

இதேவேளை - நோர்வே தூதுக் குழுவொன்றும் விரைவில் கொழும்பு வரவுள்ளதாகத் தெரியவருகிறது.

# மென்டிஸ் கொலைக்கு எதிர்ப்புத் தெரிவித்து பொ.ஐ.முவினர் கொழும்பில் ஆர்ப்பாட்டம்!

மேல்மாகாணசபை உறுப்பினரான மென்டிஸ் படுகொலைக்கு எதிர்ப்புத் தெரிவித்து, பொதுஜன ஐக்கிய முன்னணி நாடாளுமன்ற உறுப்பினர்களும், மாகாணசபை உறுப்பினர்களும் கொழும்பில் நேற்றுமுன்தினம் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.



ஆர்ப்பாட்டம் செய்யும் எதிர்க்கட்சிப் பிரமுகர்கள்

இந்த ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் - நாட்டில் சட்டம், ஒழுங்கு சீர்கெட்டுவிட்டதாகவும், அதைக் காப்பாற்றத் தவறிய உள்துறை அமைச்சர் ஜோன் அமரதுங்க மீது, உடனடியாக ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் கேட்டுக் கொண்டனர்.

இந்த ஆர்ப்பாட்டத்தில் உரை நிகழ்த்திய எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷ -

'சண்டி மல்லி' கொலைக்கெதிராக சில வாரங்களுக்கு முன்னர் நாம் போராட்டம் நடத்தினோம். இப்போது, மீண்டும் மென்டிஸ் கொலைக்கு எதிர்ப்புத் தெரிவித்து ஆர்ப்பாட்டம் நடத்துகிறோம். இத்தகைய போராட்டம் தொடர்கதையாகி விட்டது.

மென்டிஸ் கொலைக்கு அரசியல் பின்னணியே காரணம். 'சண்டி மல்லி' கொலை கொழும்பில் உயர் பாதுகாப்பு வலயத்தில் இடம்பெற்றது.

மென்டிஸ் கொலை - பொலிஸ் துறைக்குப் பொறுப்பான அமைச்சரின் வசிப்பிடத்திற்கு அருகில் இடம் பெற்றுள்ளது.

இந்தக் கொலையின் பின்னணியில், ஐ.தே.கவினருக்கு தொடர்பிருப்பதாக சந்தேகம் நிலவுகிறது எனத் தெரிவித்தார்.

மேல்மாகாண முதலமைச்சர் ரெஜினோல்ட் குரே - இந்த ஆர்ப்பாட்டத்தில் உரையாற்றியபோது,

ஜா - எலவில் இரும்புப்பாலம் ஒன்று கட்டப்பட்டதில் இடம்பெற்ற ஊழல் தொடர்பான ஆதாரங்களைத் தருவதாக, மென்டிஸ் தன்னிடம் கூறியிருந்ததாகவும், இதுவே - இவரது கொலைக்கான பின்னணிக் காரணமாக இருக்கலாமென்றும் குறிப்பிட்டார்.

இதேவேளை - இந்தக் கொலைகள் குறித்து, ஜெனவாவில் உள்ள மனிதஉரிமை ஆணைக்குழுவிடம் முறைப்பாடு செய்யப்போவதாக பொதுஜன ஐக்கிய முன்னணி அறிவித்துள்ளது.

சுனில் மென்டிஸ் கொலைக்கு, உள்துறை அமைச்சரே பொறுப்பேற்று, உடனடியாக இராஜினாமாச் செய்யவேண்டும் எனக்கோரி - பொதுஜன ஐக்கிய முன்னணியினர் நாடாளுமன்றத்தில் குழப்பம் விளைவித்ததால், நேற்றுமுன்தினம் கூட்டத்தொடர் சிறிது நேரம் ஒத்திவைக்கப்பட்டதும் குறிப்பிடத்தக்கது.

# 'சண்டி மல்லி' கொலையாளி பயன்படுத்திய கார் மீட்பு!

(கொழும்பு)

தென் மாகாண அமைச்சர் 'சண்டி மல்லி' படுகொலைக்குப் பயன்படுத்தப்பட்ட 'ரொயோரா சுப்ரீம்' கார், எரிந்த நிலையில் மஹியங்கனைக் காட்டிலிருந்து கண்டுபிடிக்கப்பட்டது.

இந்தக் கார் - கல்கிசையிலுள்ள நிதி நிறுவனம் ஒன்றினூடாக குத்தகை அடிப்படையில் வாங்கப்பட்டதாகத் தெரியவந்துள்ளது.

எரிந்த நிலையில் மீட்கப்பட்டதால், இந்தக் காரில் இருந்து, கொலைக்கான எந்தத் தடயத்தையும் கண்டுபிடிக்க முடியவில்லை எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

# புலிகளின் கப்பல் மூழ்கடிப்பு; அரசும் தனியான விசாரணை!

கிழக்குக் கடற்பரப்பில், புலிகளின் கப்பல் மூழ்கடிக்கப்பட்ட சம்பவம் தொடர்பாக, போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழு நடத்தும் விசாரணைகளுக்குப் புறம்பாக, அரசாங்கமும் விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

கொழும்பில் - சக அமைச்சர்களுடனான கலந்துரையாடலிலேயே, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க இவ்வாறு குறிப்பிட்டார்.

அத்துடன், இந்தத் தாக்குதல் பற்றி கடற்படையின் பிரதம தலைமை அதிகாரி வைஸ் அட்மிரல் மொகான் விஜயவிக்கிரமவுக் கும் எதுவும் தெரியாது எனவும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

இந்தச் சந்திப்பின்போது, தகவல் வெளியிட்ட அமைச்சர் ரவி கருணாநாயக்க, கடற்படையினர் - ஜனாதிபதி சந்திரிகாவுடன் தொடர்பு கொண்டு அவரிடமிருந்தே நேரடியாகக் கட்டளைகளைப் பெற்றதாகத் தனக்குத் தகவல்கள் கிடைத்ததாகக் குறிப்பிட்டார்.

## அதிபர்களுக்கான செயலமர்வு

(ஆழியவளை)

வடமராட்சி கல்விவலயத்தில், போஷாக்கு உணவுத் திட்டம் நடைமுறைப்படுத்தப்படுகின்ற பாடசாலை அதிபர்களுக்கான செயலமர்வு, நாளை காலை 9 மணிக்கு புலோலி மெ.மி.த.க. பாடசாலையில் நடைபெறவுள்ளது.

இச்செயலமர்வுக்கு - சம்பந்தப்பட்ட பாடசாலை அதிபரும், ஆசிரியர் ஒருவரும் தவறாது கலந்துகொள்ளுமாறு பிரதிக் கல்விப் பணிப்பாளர் பி.அருளானந்தம் தெரிவித்துள்ளார். (122)

# உணவு விவசாய ஸ்தாபனம் கிளி. விவசாயிகளுக்கு உதவி!

கிளிநொச்சி மாவட்டத்தில், சிறப்பாக இயங்கிவரும் கமக்கார அமைப்புக்கள், திட்டக்குழுக்கள் என்பவற்றிற்கு - உணவு விவசாய ஸ்தாபனத்தினரால் நீரிறைக்கும் இயந்திரமும், தெளிகருவிகளும் அண்மையில் வழங்கப்பட்டன.

இதன்படி, கரைச்சி பிரதேச செயலர் பிரிவில் உள்ள மேற்படி அமைப்புகளுக்கு, 10 நீர் இறைக்கும் இயந்திரங்களும், 121 தெளிகருவிகளும் - கண்டாவளைப் பிரதேச செயலர் பிரிவில், 03 நீரிறைக்கும் இயந்திரங்களும், 80 தெளிகருவிகளும் - பூநகரி பிரதேசசெயலர் பிரிவில், 10 நீரிறைக்கும் இயந்திரங்களும், 141 தெளிகருவிகளும் - பச்சிலைப்பள்ளி பிரதேசசெயலர் பிரிவிற்கு - 03 நீரிறைக்கும் இயந்திரங்களும், 30 தெளிகருவிகளும் வழங்கப்பட்டன.

# நிறுவை, அளவை உபகரணங்கள் சாவகச்சேரியில் முத்திரையிடப்படும்!

(தென்மராட்சி)

சாவகச்சேரி வர்த்தகர்களின் நிறுவை, அளவை உபகரணங்களுக்கு முத்திரையிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கின்றது.

சாவகச்சேரி நகரசபை எல்லைக்குள் வியாபார நடவடிக்கைகளை மேற்கொள்ளும் சகல வர்த்தகர்களும் - தங்களது நிறுவைகள், அளவைகள் கருவிகளைப் பரிசோதித்து, முத்திரையிட்டுக் கொள்ளுமாறு சாவகச்சேரி நகரசபை செயலாளர் மு.சே. சரவணபவ கேட்டுள்ளார்.

இன்றும், நாளையும் காலை 9 மணிமுதல் பிற்பகல் 1 மணி வரையும், 23 ஆம், 24 ஆம் திகதிகளில் - காலை 9 மணிமுதல் 1 மணி வரையும், சாவகச்சேரி நகரசபை அலுவலகத்தில் மேற்படி முத்திரையிடும் பணிகள் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (29)

## புதூர் நாகதம்பிரான் பொங்கல்

புதூர் வடக்கு ஸ்ரீ நாகதம்பிரான் ஆலய வருடாந்த பொங்கல் உற்சவம், எதிர்வரும் திங்கட்கிழமை நடைபெறவுள்ளது. பொங்கல் விழாவில் - ஆலயவளவில் வியாபார நிலையங்களை அமைக்க விரும்புவோர், நாளை மறுதினத்திற்குள் ஆலய பரிபாலன சபையுடன் தொடர்புகொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

## வருடாந்தப் பொதுக்கூட்டம்

மத்திய - மாகாண அரச சுருக்கெழுத்தாளர், தட்டெழுத்தாளர் சங்கத்தின் 4 ஆவது வருடாந்தப் பொதுக் கூட்டம், இன்று காலை 10 மணிக்கு நாவலர் கலாசார மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

# வெண்புறா நிறுவனத்தின் 9 ஆம் ஆண்டு நிறைவுவிழா!

## கிளிநொச்சியில் நேற்று நடைபெற்றது

(கிளிநொச்சி)

தமிழர் புனர்வாழ்வுக்கழக அனுசரணையுடன் இயங்கும், வெண்புறா செயற்கை உறுப்பு தொழில்நுட்ப நிறுவனத்தின் 9 ஆவது ஆண்டு நிறைவு விழாவும், வெண்புறா பன்நோக்கு பயிற்சி நிலையத் திறப்பு விழாவும் நேற்று கிளிநொச்சியில் நடைபெற்றன.

வெண்புறா நிறுவனத் தலைமைச் செயலகத்தில், வெண்புறா நிறைவேற்றுச் சபைத் தலைவர் வைத்திய கலாநிதி ஜெயகுலராசா தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில - மங்கல விளக்கினை 'யுனிசெப்' நிறுவனப் பிரதிநிதி பெனிபுறூன் அம்மையார், அருட்தந்தை நேசன் அடிகளார் ஆகியோர் ஏற்றிவைத்தனர். தமிழீழத் தேசியக்கொடியை - தமிழீழ ஊரக வளர்ச்சிப் பொறுப்பாளர் க.ம. அன்பரசனும், தமிழர் புனர்வாழ்வுக் கழகக் கொடியை - தமிழர் புனர்வாழ்வுக்கழக உதவி நிறைவேற்றுப் பணிப்பாளர் எஸ்.இனியவனும் ஏற்றி வைத்தனர்.

தொடர்ந்து - வெண்புறா பன்னோக்கு பயிற்சி மண்டபத்தை 'யுனிசெப்' நிறுவனப் பிரதிநிதி பெனிபுறூன் அம்மையார் நாடாவை வெட்டித் திறந்து வைத்தார்.வரவேற்புரையை ஜெயந்தி நிகழ்த்தினார்.

பத்தாவது ஆண்டில் காலபதிக்கும் வெண்புறா செயற்கை உறுப்பு தொழில்நுட்ப நிறுவனத்தின் சிறப்பு மலரினை - தமிழர் புனர்வாழ்வுக் கழக நிறைவேற்றுப் பணிப்பாளர் கே.பி.றெஜி வெளியிட்டு வைத்தார். முதற்பிரதியை 'யுனிசெப்' பிரதிநிதி பெனிபுறூன் பெற்றுக்கொண்டார்.

மேலும், வெண்புறா தொழில்நுட்பவியலாளர் 85 பேருக்கு மேற்படி கழகத்தின் பொருளாதார அபிவிருத்தி வங்கியின் வைப்புப் புத்தகம், தமிழர் புனர்வாழ்வுக்கழக நிறைவேற்றுப் பணிப்பாளரால் வழங்கிக் கௌரவிக்கப்பட்டது.

## வருடாந்த உற்சவம்

(தொல்புரம்)

தொல்புரம் கிழக்கு அருள்மிகு ஸ்ரீ பூதராசி அம்மன் ஆலய அலங்கார உற்சவம், கடந்த 10 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றது. ஆலயப் பிரதமகுரு பிரம்மஸ்ரீ மகேஸ்வரன் அப்பாத்துரைக் குருக்கள் தலைமையில் திருவிழா இடம்பெற்றுவருகிறது.

# வனவள பாதுகாப்பு அலுவலகம் மன்னாரில் திறந்து வைப்பு!

(மன்னார்)

தமிழீழ வனவள பாதுகாப்பு பிரிவின் மன்னார் மாவட்டத்திற்கான அலுவலகம், நேற்றுமுன்தினம் மன்னார் நகரில் திறந்துவைக்கப்பட்டது.

வனவள பாதுகாப்பு பிரிவின் மன்னார் மாவட்டப் பொறுப்பாளர் கதிர் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் -

பொதுச் சுடரினை மன்னார் மாவட்ட மகளிர் பிரிவுப் பொறுப்பாளர் ஏற்ற, தேசியக் கொடியை கிளிநொச்சி மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் முரளி ஏற்றினார்.

அலுவலகத்தின் பெயர்ப் பலகையை அருட்தந்தை அன்ரன் அடிகளார் திரைநீக்கம் செய்தார்.

## வடமராட்சி கிழக்கு

# மாவீரர் துயிலுமில்லத்துக்கு பொதுமக்கள் பாதை அமைப்பு

வடமராட்சி கிழக்கில், புதிதாக அமைக்கப்பட்ட மாவீரர் துயிலும் இல்லத்துக்குப் பாதை அமைக்கும் பணியில், கடந்த வெள்ளிக்கிழமை பொதுமக்கள் ஈடுபட்டனர்.

வேம்படி முத்தமிழ் சனசமூக நிலையமும், வேம்படி ஓடுமீன் விளையாட்டுக் கழகமும் இணைந்து, இந்தப் பாதை அமைக்கும் பணியில் ஈடுபட்டன. இப்பாதை அமைக்கப்பட்டதன் மூலம், துயிலுமில்லக் கட்டுமானப் பணிக்கான பொருட்களை இலகுவாகக் கொண்டு செல்வதற்கான வாய்ப்பு உருவாகியிருப்பது குறிப்பிடத்தக்கது


நிரஞ்சனாஸ் சங்கானை

விஜயகாந், பிரகாஷ்ராஜ், சௌந்தர்யா நடித்த

சொக்கத் தங்கம்

காட்சி நேரம் 11.00, 2.45, 6.00 (பு.நே)

வெள்ளி, சனி, ஞாயிறு இரவு. 8.45 (பு.நே) (சி-974)

BEHIND ENEMY LINE

ராஜா யாழ்ப்பாணம்.

இந்தியாவிலும், இலங்கையிலும் ஒரே தின வெளியீடு சரத்குமார், மீனா, ரம்யா கிருஷ்ணன் நடித்த

கே.எஸ்.ரவிக்குமாரின்

பாறை



10.30, 2.30, 6.30, 9.30 (சி-973)


# யுத்த பாதிப்புக்குள்ளானோருக்கு குடும்ப புனர்வாழ்வு நிலையம் உதவி!

கடந்தகால யுத்தத்தினால் - சித்திரவதைக்குள்ளானோருக்கும், குண்டு வெடிப்பினால் பாதிப்புற்றோருக்கும்- உடல், உள சிகிச்சையினை குடும்ப புனர்வாழ்வு நிலையம் வழங்கி வருகின்றது.

ஊர்காவற்துறை புனித அன்ரனிஸ் கல்லூரியில் - நேற்று இலவச சிகிச்சைகளும், ஆலோசனைகளும் வழங்கப்பட்டன.

இத்தகைய கருத்தரங்குகள் - குடும்ப புனர்வாழ்வு நிலையத்தால் யாழ். மாவட்டத்தின் பல்வேறு இடங்களில் கட்டங்கட்டமாக நடத்தப்பட்டு வருகின்றன.

யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட 44 பேருக்கு, ஒவ்வொரு வார இறுதியிலும், கோயில் வீதியில் அமைந்துள்ள அலுவலகத்தில் விசேட வைத்திய நிபுணர் மூலம் உடல், உள மருத்துவ சேவைகள் வழங்கப்பட்டு வருகின்றன.

அத்துடன் - சட்ட உதவி, உளச் சிகிச்சை, நடமாடும் பன்முகச் சிகிச்சை, யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட சிறுவர்களுக்கு விளையாட்டு மூலம் மனநெருக்கீட்டின் தாக்கத்தைக் குறைத்தல் போன்ற பல உதவிகளையும் இந்த நிறுவனம் வழங்கி வருவது குறிப்பிடத்தக்கது.

### —சந்திரிகாவின் தீர்வுத்திட்டத்தை—

# இறுதித் தீர்வாக ஏற்றால் மட்டுமே இடைக்கால நிர்வாகத்துக்கு ஆதரவு!

## சிறிலங்கா சுதந்திரக்கட்சி தெரிவிப்பு

(கொழும்பு)

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவினால், 2000 ஆம் ஆண்டில் முன்வைக்கப்பட்ட, அரசியல் தீர்வு யோசனைகளை - ஐக்கிய தேசிய கட்சி அரசாங்கமும், விடுதலைப் புலிகளும் இறுதித்தீர்வாக ஏற்றுக்கொண்டால் - வடக்குக் கிழக்கில் இடைக்கால நிர்வாகத்தை ஏற்படுத்த - சிறிலங்கா சுதந்திரக்கட்சி ஆதரவு வழங்கும் என்று, அக்கட்சியின் தகவல் வெளியீட்டுப்பிரிவு அறிவித்துள்ளது.

2000 ஆம் ஆண்டு ஒகஸ்ட் 3 ஆம் திகதி ஜனாதிபதி சந்திரிகாவினால், முன்வைக்கப்பட்ட அரசியல் தீர்வு யோசனைகளை இறுதித் தீர்வாகப் புலிகள் ஏற்றுக்கொண்டால் மட்டுமே, இடைக்கால நிர்வாகத்தை அவர்களிடம் கையளிக்க முடியும் என்று எமது கட்சியால் தெளிவாகத் தெரிவிக்கப்பட்டது.

ஆனால், அரசாங்கமோ - விடுதலைப் புலிகளுடன் பேச்சுக்களை நடத்தி, எந்த இணக்கத்தையும் எட்டாமல், இடைக்கால நிர்வாகத்தை வழங்கமுனைகிறது.


2000 ஆம் ஆண்டு அரசியல் தீர்வு யோசனைகளை இறுதித்தீர்வாக ஏற்காமல் - இடைக்கால நிர்வாகத்தைப் புலிகளிடம் வழங்குவதை சிறிலங்கா சுதந்திரக் கட்சி ஒருபோதும் அனுமதிக்காது.

இவ்வாறு இடைக்கால நிர்வாகம் ஏற்படுத்தப்படுவது - விடுதலைப் புலிகளுக்கு ஈழத்தைப் பெற்றுக் கொடுக்கும் நடவடிக்கையாகவே அமையும் என்றும் - சுதந்திரக்கட்சியின் தகவல் வெளியீட்டுப் பிரிவு மேலும் தெரிவித்துள்ளது.

### விவசாயியை காணவில்லை

பொலநறுவை மாவட்டம், வெலிகந்த- ஊத்துச்சேனை பிரதேச காட்டுக்கு, விறகுவெட்டச் சென்ற ஓட்டமாவடியைச் சேர்ந்த முஸ்லிம் விவசாயி ஒருவர் காணாமற்போயுள்ளதாக- வாழைச்சேனைப் பொலிஸ் நிலையத்திலும், கண்காணிப்புக் குழு அலுவலகத்திலும் முறையிடப்பட்டுள்ளது.

## நாடும் நடப்பும்




# ரயில், பஸ் சேவைகளை தனியார் மயமாக்க முடியாது

## அமைச்சர் மாரப்பன தெரிவிப்பு

ரயில்வே திணைக்களம் மற்றும் கொத்தணி பஸ் கொம்பனிகளை தனியார் மயப்படுத்தும் யோசனைகளுக்கு, பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பன கடும் எதிர்ப்புத் தெரிவித்துள்ளார்.

கொத்தணி பஸ் கொம்பனிகளின் நிர்வாகிகளுடன், நடத்திய மாநாட்டில் அமைச்சர் திலக் மாரப்பன மற்றும் போக்குவரத்து பிரதி அமைச்சர் உபாலி பியசோம உள்ளிட்ட அதிகாரிகள் பலரும் கலந்து கொண்டனர்.

இந்தக் கூட்டத்தில் கொத்தணி பஸ் கொம்பனி நிர்வாகிகள், தம்மால் ஊழியர்களுக்குச் சம்பளம் வழங்க முடியாதிருப்பதாகவும், பஸ் கொம்பனிகள் நட்டத்தில் இயங்குவதாகவும் - இதனால், தனியார் மயப்படுத்துமாறும் கேட்டுக்கொண்டனர்.

ஆனால், அமைச்சர் திலக் மாரப்பன இதற்கு இணங்கவில்லை. கொத்தணி பஸ் நிலையங்களையோ, ரயில்வே திணைக்களத்தையோ தனியார் மயப்படுத்துவதற்கு, ஒருபோதும் இடமளிக்கப் போவதில்லை என அவர் தெரிவித்தார்.

இதையடுத்து, கூட்டத்தில் குழப்பம் ஏற்பட்டது. அமைச்சர் திலக் மாரப்பனவுடன், முரண்பட்டுக்கொண்ட கொத்தணி பஸ் கொம்பனி நிர்வாகிகள் கூட்டம் நடந்துகொண்டிருந்த போது அங்கிருந்து வெளிநடப்புச் செய்தனர்.



மனநல வைத்தியசாலையொன்றை அமைப்பதற்கான நிதி திரட்டும் ஆரம்ப வைபவம், கடந்த திங்களன்று மாலை ஜனாதிபதி மாளிகையில் இடம்பெற்றபோது - ஜனாதிபதி சந்திரிகாவும், ரணிலும். இது ஆழ்ந்த சிந்தனையா? இல்லை உறக்கமா?

# சமாதானப் பேச்சில் ஏற்பட்டுள்ள சிக்கலை தீர்க்க முடியுமென கனடா நம்பிக்கை

## அந்நாட்டு அரசாங்கச் செயலாளர் தெரிவிப்பு

(ரொரன்ரோ)

இலங்கையில், அரசாங்கத்துக்கும் - தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான சமாதானப் பேச்சுக்களில் ஏற்பட்டிருக்கின்ற சிக்கல்நிலை - தீர்த்துவைக்கக்கூடியதொன்றே என, கனடா கருதுவதாகவும் -

சமாதானப் பேச்சுக்களில் இருந்து ஒதுங்கிக்கொள்வதாகப் புலிகள் எடுத்திருக்கும் தீர்மானம் தற்காலிகமானதே என்றும் - கனடா அரசாங்கம் அறிவித்துள்ளது.

சர்வதேச விவகாரங்கள் தொடர்பான, ஆலோசனைகளை வழங்கும் கனேடிய நாடாளுமன்ற உறுப்பினர்களின் கூட்டம் அண்மையில் நடைபெற்றபோது, அதில் கலந்துகொண்டு பேசிய கனேடிய அரசாங்கத்தின் செயலாளர் இந்த நம்பிக்கையை வெளியிட்டார்.

சமாதானப் பேச்சுக்களில் நெருக்கடிகள் ஏற்பட்டாலும், புரிந்துணர்வு போர்நிறுத்த உடன்பாட்டைக் கடைப்பிடிக்கும் கடப்பாட்டுடன் இருப்பதாகப் புலிகள் தெரிவித்திருப்பதை கனடா வரவேற்கிறது.

தற்போதைய சமாதான முயற்சிகளில் நெருக்கடிகள் ஏற்பட்டிருப்பினும், அரசாங்கமும் - விடுதலைப் புலிகளும் இணைந்து இறுதியான தீர்வினைக் காணக்கூடிய வாய்ப்புகள் இருப்பதாக, கனடா நம்புவதாகவும் - கனேடிய அரசாங்கச் செயலாளர் மேலும் தெரிவித்தார்.

# பொ.ஐ.மு. முக்கியஸ்தர்களை சந்திரிகா சந்தித்துப் பேச்சு!

## ரணில் அரசு மீது கடுமையான ஆட்சேபம்

(கொழும்பு)

பொதுஜன ஐக்கிய முன்னணியின் முக்கியஸ்தர்களுடன், ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க நேற்று முன்தினம் முக்கியமான சந்திப்பு ஒன்றை நடத்தியதாகத் தெரியவருகிறது.

ஜனாதிபதி மாளிகையில் இடம்பெற்ற இந்தச் சந்திப்பில் - ஜே.வி.பியுடனான கூட்டணி தொடர்பான பேச்சுக்கள் குறித்தும், தற்போதைய அரசியல் நிலைமை குறித்தும் விரிவாக ஆராயப்பட்டதாகத் தெரியவருகிறது.

முக்கியமாக, அரசாங்கத்தின் நடவடிக்கைகள் குறித்து, இந்தக் கூட்டத்தில் பலராலும் கடுமையாக விமர்சிக்கப்பட்டது. தொடர்ச்சியாக பொ.ஐ.முவின் மாகாணசபை உறுப்பினர்கள் மற்றும் உள்ளூராட்சி சபை உறுப்பினர்கள், ஆதரவாளர்கள் கொல்லப்பட்டுவருவது பற்றி கட்சி முக்கியஸ்தர்கள், ஜனாதிபதி சந்திரிகாவின் கவனத்துக்குக் கொண்டுவந்தனர்.

இந்தக் கூட்டத்தில் -

ஜனாதிபதி சந்திரிகா, ஐ.தே. அரசாங்கம் சட்டம், ஒழுங்கைப்பேண உரிய நடவடிக்கை எடுக்காவிட்டால், தான் அதில் தலையிடவேண்டிய நிலை உருவாகும் என்றும் - குறித்த நேரத்துக்காகவே, தான் காத்திருப்பதாகவும் தெரிவித்ததாகக் கூறப்படுகிறது.

# படையினரின் பாதுகாப்புக் கெடுபிடிகள் கிழக்குப் பகுதியில் மீண்டும் அதிகரிப்பு!

(திருகோணமலை)

கிழக்கு மாகாணத்தில் - அரச படையினரும், பொலிஸாரும் மீண்டும் தீவிரமான பாதுகாப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டிருப்பதாகவும் - புதிய சோதனை நிலையங்கள், காவல் நிலையங்களை அமைப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

திருகோணமலை மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளிலும் - இராணுவத்தினர், கடற்படையினர் மற்றும் பொலிஸார் பல்வேறு பகுதிகளிலும் மீண்டும் சோதனைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

அத்துடன், திருகோணமலைக் கரையோரப் பகுதிகளில் புதிதாகக் காவலரண்கள் அமைக்கப்பட்டு, அங்கு படையினர் காவல் கடமைகளில் ஈடுபடுத்தப்பட்டிருக்கின்றனர்.

இதேவேளை -

மட்டக்களப்பு மாவட்டத்திலும், கடந்த சிலநாட்களாகப் பாதுகாப்புக் கெடுபிடிகள் அதிகரித்திருப்பதாகத் தெரியவருகிறது. பட்டிருப்புப் பாலத்தினூடாக - புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியில் இருந்து, நகரத்துக்குள் வருவோர் மீது கடுமையான சோதனைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

பட்டிருப்புச் சோதனைச் சாவடியில் வைத்து, அனைத்து வாகனங்களும் படையினரால் பதிவுசெய்யப்படுகின்றன. அத்துடன், வாகனங்களில் வரும் பயணிகள் அனைவரும் இறக்கப்பட்டு - கடுமையாகச் சோதனையிடப்படுவதுடன், சிறிது தூரத்துக்கு நடந்துசெல்லுமாறும் நிர்ப்பந்திக்கப்படுகின்றனர்.

அத்துடன், மண்முனை விசேட அதிரடிப்படையினரின் சோதனைச் சாவடியை மீளவும் திறக்கும் நோக்கில், புனரமைப்புப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இதேவேளை - கல்முனைப் பொலிஸ் நிலைய வீதியும், பொதுமக்கள் பாவனைக்குத் தடைசெய்யப்பட்டுள்ளது.

மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளிலும் - இராணுவத்தினர் மற்றும் பொலிஸாரின் பாதுகாப்புக் கெடுபிடிகள் அதிகரித்துள்ளன.

அம்பாறை மாவட்டத்திலும் - விசேட அதிரடிப்படையினரின் நடவடிக்கைகள் தீவிரமடைந்திருப்பதாகவும், இரவுநேர ரோந்து நடவடிக்கைகள் உள்ளிட்ட பல்வேறு நடவடிக்கைகளிலும் இவர்கள் ஈடுபட்டுவருவதாகவும் தெரியவருகிறது.

# வறுமையால் நாளொன்றுக்கு 25 ஆயிரம் பேர் உலகில் மரணம்!

## வறுமை ஒழிப்பு மாநாட்டில் தகவல்

(கொழும்பு)

உலகில் நாளொன்றுக்கு இருபத்தையாயிரம் பேர், வறுமையால் உயிரிழப்பதாக கொழும்பில் நடந்த வறுமை ஒழிப்பு தொடர்பான மாநாட்டில் தெரிவிக்கப்பட்டது.

35 நாடுகளின் பிரதிநிதிகள் கலந்துகொண்ட இந்த மாநாட்டில், உரை நிகழ்த்திய வறுமை ஒழிப்புக்கான சர்வதேச அமைப்பின் பிரதிநிதி டொக்டர் அர்ஜுன் கபே,

உலகில் வறுமையால் பாதிக்கப்பட்டுள்ள மக்களில், எழுபத்தைந்து வீதமானோர் தெற்காசிய நாடுகளில் வாழ்கின்றனர்.

வறுமையால் மக்கள் பாதிக்கப்படுவதற்குப் பல்வேறு காரணங்கள் உள்ளன. இதற்கு அரசியல் காரணங்கள் மட்டுமன்றி - சமூக, பொருளாதாரக் காரணிகளும் இருக்கின்றன.

நவீன தொழில்நுட்ப வசதிகளால், வறுமையைத் தீர்க்கமுடியாது. அனைத்துத் தரப்பினரதும் ஒருங்கிணைந்த நடவடிக்கைகள் மூலமே, வறுமையைத் தீர்க்கமுடியும் என - அவர் மேலும் தெரிவித்தார்.

# சூழலை மாசுபடுத்தும் பிளாஸ்ரிக் பொருட்கள் கிளிநொச்சியில் கொள்வனவுக்கு ஏற்பாடு!

(கிளிநொச்சி

கிளிநொச்சி மாவட்டத்தில் சுற்றுச்சூழல் பாதுகாப்புத் தினத்தை முன்னிட்டு - சூழலை மாசுபடுத்துகின்ற பிளாஸ்ரிக் பொருட்கள், பொலித்தின் கழிவுப்பொருட்கள் என்பவற்றைக் கொள்வனவு செய்யும் நடவடிக்கையில் தமிழர் புனர்வாழ்வுக் கழகம் ஈடுபட்டுள்ளது.

இது சம்பந்தமான பிரசாரக் கூட்டங்கள் கிராமங்கள்தோறும் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக் கழகம், அரசியற்துறை மற்றும் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினரால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

பொதுமக்களால் சேகரிக்கப்படும் பிளாஸ்ரிக் பொருட்கள் கிலோ 50 ரூபாவிற்கும், பொலித்தீன் கழிவுகள் 100 ரூபாவிற்கும் மேற்படி நிறுவனங்களால் கொள்வனவு செய்யப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது.(122)

# கரும்புலிகள் நாள் நிகழ்வுகளுக்கு மருதங்கேணியில் ஏற்பாடு தீவிரம்!

## போட்டிகளும் நடத்தப்படவுள்ளன

மருதங்கேணிப் பிரதேசத்தில் அடுத்தமாதம் 5 ஆம் திகதி, கரும்புலிகள் தினத்தை உணர்வுபூர்வமாக, எழுச்சியுடன் அனுஷ்டிப்பதற்கான ஏற்பாடுகளை அப்பிரதேசத்திலுள்ள பொதுஸ்தாபனங்கள் மேற்கொண்டு வருகின்றன.

இத்தினத்தை முன்னிட்டுப் பல்வேறுபட்ட போட்டிகள் நடத்தப்பட்டு பெறுமதிமிக்க பரிசில்களும் வழங்கப்படவுள்ளன.

பாடசாலை மாணவர்களுக்கிடையே -கவிதை, பேச்சுப்போட்டிகளும்- விளையாட்டுக் கழகங்களுக்கிடையே உதைபந்தாட்டம், வலைப்பந்தாட்டம், நாடகம் ஆகிய போட்டிகளும் நடைபெறவுள்ளதுடன், திறந்த போட்டியாக நீச்சல் போட்டிகளும், இயந்திரப் படகு ஓட்டப்போட்டிகளும் இடம்பெறவுள்ளன. கரும்புலிகள் நாள் வீரவணக்கக் கூட்டமும், பெற்றோர் கௌரவிப்பும், கலைநிகழ்வும், பரிசில் வழங்கும் வைபவமும் அடுத்த மாதம் 5 ஆம் திகதி சனிக்கிழமை மாலை உடுத்துறை செந்தமிழ் விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெறும் என நிகழ்வின் ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர். (122)

# வாழ்க வளமுடன்

HAPPY BIRTHDAY

## நான்காவது அகவையில்



பெயர் - எம்.ஏ.எல்.டன்ஸ்ரன்
முகவரி - புகையிரத விடுதி, வவுனியா

## ஏழாவது அகவையில்

பெயர் - இ.உமேஸ்
முகவரி - ஊறெல்லைத் தெரு, மீசாலை.



பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றோம்

## வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர்:------------------------------------

முகவரி :------------------------------------

பிறந்த ஆண்டு:------------------------------------

கூப்பன்கள் பத்தும், புகைப்படமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.

------------------------
பெற்றார் ஒப்பம்

# கால்நடை மருத்துவ திணைக்களத்தில் ஆளணிப் பற்றாக்குறை நிலவுகிறது!

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள கால்நடை மருத்துவசேவை திணைக்களத்தில் ஆளணிப் பற்றாக்குறை நிலவிவருவதன் காரணமாக, திருப்தியான சேவையைச் செய்யமுடியாத நிலையிலுள்ளதாக திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

பல வருடகாலமாக இங்குள்ள ஆளணி வெற்றிடங்கள் நிரப்பப்படாமலுள்ளது. 16 கால்நடை மருத்துவ ஆளணியினர் இருக்கவேண்டிய இம் மாவட்டத்தில் 3 பேர் மாத்திரமே கடமையாற்றுகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. (122)

## சின்னஞ்சிறு செய்திகள்

### மன்னாரில் இலவச சட்ட ஆலோசனை

மன்னார் மாவட்டத்திலுள்ள வறிய குடும்பங்களுக்கு இலவச சட்ட ஆலோசனைகளை, இலங்கை சட்ட சேவைகள் நிறுவனத்தின் சட்டத்தரணிகளும், மன்னார் மாவட்டச் சட்டத்தரணிகளும் இணைந்து வழங்கினர்.

குடும்பப் பிரச்சினைகள், விவாகரத்து, பெண்களின் பிரச்சினைகள், சிறுவர் துஷ்பிரயோகம், கொடுக்கல் வாங்கல் பிணக்கு, காணிப் பிரச்சினைகள் போன்ற பல்வேறு பிரச்சினைகள குறித்து பெருமளவானோர சட்ட ஆலோசனைகளைப் பெற்றுள்ளனர்.

### மின்சார விநியோகம் விஸ்தரிப்பு

நயினாதீவு ஆலய உற்சவத்தை முன்னிட்டு மின்சாரசபை இரவு 12 மணிவரை மின் விநியோகத்தை விஸ்தரித்துள்ளது.

அதேவேளை, வீதி அபிவிருத்தி அதிகாரசபையும் அங்கு வீதித்திருத்த வேலைகளை மேற்கொண்டு வருவதும் குறிப்பிடத்தக்கது.

### பளையில் தொழிற்பயிற்சி நிலையம்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி தொழில்நுட்பக் கல்லூரியின் பளைப்பிரிவு, கடந்த வெள்ளிக்கிழமை முதல் பளை நகரத்திலுள்ள தனியார் நிறுவனக் கட்டடம் ஒன்றில் இயங்கிவருகின்றது.

போரூட் நிறுவனத்துடன் இணைந்து ஆரம்பிக்கப்பட்டுள்ள இப்பயிற்சி நிலையத்தில் மேசன், தச்சு வேலைக்கு 50 பேர் தெரிவுசெய்யப்பட்டு பயிற்சிபெற்று வருகின்றனர்.

உதவி அரசாங்க அதிபர் சு.புத்திசிகாமணி தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில்- கிளிநொச்சி மாவட்டத் திட்டப் பணிப்பாளர், பிரதித் திட்டமிடல் பணிப்பாளர் ஆகியோரும் கலந்துகொண்டனர். (122)

### தரம் 10 இல் தகவல் தொழில்நுட்பம்

(ஆழியவளை)

2004 ஆம் ஆண்டு தொடக்கம் அரசாங்கப் பாடசாலைகளில் தரம் 10 இல் தகவல் தொழில்நுட்பப் பாடம் அறிமுகப்படுத்தப்படவுள்ளதாகக் கல்வியமைச்சு அறிவித்துள்ளது.

தரம் 10 இல், மேலதிக பாடங்களில் ஒன்றாக தகவல் தொழில்நுட்பப் பாடத்தைக் கற்கமுடியும்.

இதேவேளை, இவ்வருடம் தொடக்கம் க.பொ.த. உயர்தர வகுப்பில் தகவல் தொழில்நுட்பப் பாடம் சேர்த்துக் கொள்ளப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (122)

# இடைக்கால நிர்வாகத்திற்குப் பதிலான மாற்றுத் தீர்வுகளை ஏற்க முடியாது!

## கஜேந்திரகுமார் பொன்னம்பலம் எம்.பி.தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

வடக்கு - கிழக்கிற்கான இடைக்கால நிர்வாகசபையை அமைக்காது, வேறெந்த அதிகாரமற்ற மாற்றுத் தீர்வை அரசாங்கம் முன் வைத்தாலும், அதனை ஏற்றுக்கொள்ள முடியாது என்று தமிழ் தேசிய கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்துள்ளார்.

வடக்கு - கிழக்குப் புனர்நிர்மாணப் பணிகளை மேற்கொள்வதற்கு, இரு ஆணையாளர்கள் நியமிக்கப்படுவார்கள் என்று நீதி அரசியலமைப்பு விவகார அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் கூறியது தொடர்பாகக் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு கூறினார். (க)

## சின்னஞ்சிறு செய்திகள்

### பாடசாலைக்கு நிதியுதவி

(உடுத்துறை)

சுவிஸ் நாட்டில் வசிக்கும் உடுத்துறை மகா வித்தியாலய பழைய மாணவர்கள், பாடசாலை அபிவிருத்திக்கு என 3 இலட்சம் ரூபா அன்பளிப்புச் செய்துள்ளனர்.

இந்த நிதியுதவியைப் பயன்படுத்திப் பாடசாலைக்கான விளையாட்டு மைதானம் அமைத்தல், சுற்றுமதில் அமைத்தல் ஆகிய வேலைகள் மேற்கொள்ளப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (17)

### சித்திரவதை எதிர்ப்புக் கருத்தரங்கு

உலகச் சித்திரவதைக்கு எதிரான நாளை முன்னிட்டு, குடும்பப் புனர்வாழ்வு நிலையம் - யாழ்.மாவட்டத்திலுள்ள அரச, அரசசார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள் பாடசாலை ஆசிரியர்கள் மற்றும் மதகுருமார்களுக்கு இது தொடர்பான கருத்தரங்கொன்றை நடாத்தவுள்ளது.

கொழும்பிலிருந்து வருகைதரும் குடும்பப் புனர்வாழ்வு அதிகாரிகளினால், எதிர்வரும் 26 ஆம் திகதி சென்.பற்றிக்ஸ் வீதியில் அமைந்துள்ள அகவொளி நிலையத்தில் இக் கருத்தரங்கு நடைபெறவுள்ளது குறிபபிடத்தக்கது.

### பளையில் 9 ஆயிரம் பேர் மீள்குடியமர்வு

(பளை)

பளை உதவி அரசாங்க பிரிவில், கடந்த மே மாதம்வரை இரண்டாயிரத்து 319 குடும்பங்களைச் சேர்ந்த எண்ணாயிரத்து 943 பேர் மீளக் குடியேறியுள்ளதாக, உதவி அரசாங்க அதிபர் சு.புத்திசிகாமணி தெரிவித்துள்ளார்.

இவர்களில் 750 பேருக்கு ஏற்கனவே மீளக்குடியமர்வுக் கொடுப்பனவு வழங்கப்பட்டதாகவும், 808 பேருக்கு விரைவில் இக்கொடுப்பனவு வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (122)

# தமிழ்-முஸ்லிம் காணிப்பிரச்சினை வாழைச்சேனையில் ஆராய்வு!

(கொழும்பு)

தமிழ் - முஸ்லிம் மக்களின் காணிப் பிரச்சினைகள் குறித்து ஆராயும் கூட்டம், வாழைச்சேனை பிரதேச செயலகத்தில் இடம்பெற்றது. நேற்றுமுன்தினம் இடம்பெற்ற இந்தக் கூட்டத்தில்- வாழைச்சேனை, கிரான், ஓட்டமாவடி ஆகிய பகுதிகளிலுள்ள பிரச்சினைகள் குறித்து ஆராயப்பட்டது.

தமிழர்களின் தரப்பில், விடுதலைப் புலிகளின் மட்டு - அம்பாறை நிதித்துறைப் பொறுப்பாளர் நிஸாம் தலைமையில், ஆண்டான்குளம் கோட்ட அரசியற்பொறுப்பாளர் எஸ். தோத்திரன், சந்திரமோகன், எஸ். ஜெயானந்தமூர்த்தி, முத்துமாதவன், சுகுமார், சிவலிங்கம் ஆகியோர் பங்கேற்றனர்.

முஸ்லிம்கள் தரப்புக் குழுவுக்கு முஸ்லிம் காங்கிரஸ் அமைப்பாளர் எம்.ரி.பரீட் தலைமை தாங்கினார்.

இந்தக் கூட்டத்தில், களுவங்கேணியில் முஸ்லிம்களின் குடியேற்றம் தொடர்பாகவும், ஓட்டமாவடியிலிருந்து இடம்பெயர்ந்த தமிழ் மக்களின் பிரச்சினைகள் தொடர்பாகவும் ஆராயப்பட்டது.

1983 ஆண்டுக்கு முன்னர் ஓட்டமாவடியில் வசித்துவந்த பல தமிழ்க் குடும்பங்கள் அங்கிருந்து வெளியேற்றப்பட்டனர். இவர்கள் களுவங்கேணியில் தற்காலிக குடியிருப்புக்களில் வாழ்ந்து வருகின்றனர்.

ஓட்டமாவடியிலிருந்து பிள்ளையார் கோவில் இடிக்கப்பட்டு அதில் மீன் சந்தை அமைக்கப்பட்டுள்ளது. தமிழ் மக்களின் மயானத்தில் பிரதேச செயலகம் அமைக்கப்பட்டுள்ளது.

ஓட்டமாவடியில் மீண்டும் தமிழ் மக்களை மீளக்குடியமர்த்துவது பற்றி இந்தக்கூட்டத்தில் ஆராயப்பட்டது. எனினும், இறுதி முடிவு எதுவும் இக் கூட்டத்தில் எடுக்கப்படவில்லை.

# தபால் நிலைய வீதியில் போக்குவரத்து நெருக்கடி

யாழ். நகரில் ஸ்ரான்லி வீதியையும், மின்சார நிலைய வீதியையும் இணைக்கும் தபால் நிலைய வீதியில் போக்குவரத்து நெருக்கடி அதிகரித்து வருகின்றது.

இதனால் - பொதுமக்களும், மாணவர்களும் பெரிதும் சிரமத்தை எதிர்நோக்குகின்றனர். தனியார் கல்வி நிலைய வகுப்புகளுக்கு செல்லும் மாணவர்கள், பஸ்நிலையத்தை அடைவதற்கு இந்த வீதியையே பயன்படுத்துகின்றனர். மேலும், தனியார் பஸ்களும் இந்த வீதியிலேயே நிறுத்தப்படுவதால், வீதியில் போக்குவரத்து நெருக்கடி அதிகரித்திருக்கிறது.

யாழ்.நகர்ப் பகுதியில் படையினர் தங்கியிருக்கும் சுபாஸ் ஹோட்டல், ஞானம்ஸ் ஹோட்டல் போன்றவற்றில் படையினர் தங்கியிருப்பதால், மணிக்கூட்டு வீதியூடான போக்குவரத்துத் தடைசெய்யப்பட்டிருக்கிறது. இதனால், தபால் நிலைய வீதியைப் பொதுமக்கள் அதிகளவில் போக்குவரத்துக்குப் பயன்படுத்துவதால், நெருக்கடிகள் அதிகரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

# தெங்குப் பயிர்ச்செய்கையும் எதிர்கொள்ளப்படும் இடர்களும்

உழைப்போம் உயர்வோம்! தொழில் மலர்

(சென்றவாரத் தொடர்ச்சி...)

கடந்தகால இராணுவ நடவடிக்கைகள் காரணமாக - வடபகுதியில் மட்டும் சுமார் 20 ஆயிரம் ஏக்கரில் காணப்பட்ட தென்னை வளம் முற்றாக அழிக்கப்பட்டிருப்பதாகப் புள்ளிவிபரங்கள் தெரிவிக்கின்றன.

எமது தெங்கு அபிவிருத்தி உத்தியோகத்தர் ஊடாகத் தங்கள் பகுதியில் ஏற்பட்ட அழிவுகள், அப்பகுதிக் கிராமசேவகர்கள் மூலமாக புள்ளிவிபரங்களாகத் தொகுக்கப்பட்டன. அதன் சாராம்சம் கீழே தரப்படுகின்றது.

மன்னார் மாவட்டம், சிலாபம் பிராந்தியக் காரியாலயத்திற்குக்கீழ் வருவதாலும் - வவுனியா மாவட்டம், அநுராதபுரம் பிராந்தியக் காரியாலயத்திற்குக்கீழ் வருவதாலும் மேற்படி அட்டவணையில் அம்மாவட்டங்களுக்குரிய விபரம் சேர்க்கப்படவில்லை.

| மாவட்டம் | தெங்கு அபிவிருத்தி உத்தியோகத்தர் பிரிவு | ஆய்வு செய்யப்பட்ட கிராமசேவகர் பிரிவுகள் | பாதிக்கப்பட்ட தென்னை விஸ்தீரணம் ஏக்கரில் | பாதிக்கப்பட்ட தென்னை மரங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| 1. யாழ்ப்பாணம் | யாழ்ப்பாணம் | 107 | 3562 | 195294 |
| 2. கிளிநொச்சி | பளை | 18 | 5294 | 210869 |
| | கிளிநொச்சி | 34 | 3252 | 147286 |
| 3. முல்லைத்தீவு | முல்லைத்தீவு | 77 | 5011 | 201421 |
| 4. மன்னார் | மன்னார் | | | |
| 5. வவுனியா | வவுனியா | | | |
| மொத்தம் | | 236 | 17119 | 755870 |

மேற்படி தரவுகள் மக்கள் செல்லக்கூடியதும், மீள்குடியேற்றத்திற்கு அனுமதிக்கப்பட்ட பகுதிகளிலிருந்து மட்டுமே பெறப்பட்டவை. ஆகவே, இதர பகுதிகளிலும் புள்ளிவிபரம் எடுத்து, அத்துடன் - மன்னார், வவுனியா மாவட்டங்களையும் கவனத்தில் எடுக்கும்போது, சுமார் 20 ஆயிரம் ஏக்கரில் தென்னைவளம் அழிவுற்றுள்ளமை கண்கூடாகத் தெரிகிறது. இது எமது தென்னை வளத்தின் 65 வீதமாகும்.

**மீள்நடுகை**

ஆகவே, மேற்படி அழிக்கப்பட்ட 20 ஆயிரம் ஏக்கர் தென்னைவளமும் ஏதோ ஒரு வழியில் மீள்நடுகை செய்யப்படவேண்டும். இது ஒரு நெடியகாலத் திட்டத்தின்கீழ் மேற்கொள்ளும்பொருட்டு **"Special Programme to Development Coconut lands in Five District of Northern Province"** என்னும் தலைப்பில், 615 ரூபா மில்லியனுக்கான தற்போதைய தென்னை மானியத்திட்டங்களுக்கு அமைவான, ஒரு ஐந்து வருடகாலத் திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டு, எமது பிரதான காரியலயத்துக்கு அனுப்பப்பட்டது. அவர்கள் இத்திட்டத்தின் அவசியத்தையும், தேவையையும் கருததில் கொண்டு, பின்வரும் வேண்டுகோளுக்கு அமைய அத்திட்டத்தை மாற்றியமைத்து மெருகூட்டியிருக்கின்றனர்.

1. மீள்நடுகைக்கான மானியம் ஏக்கருக்கு **15,500** ரூபாவிலிருந்து, **30,000** ரூபாவிற்கு உயர்த்தப்படவேண்டும்.

2. புது நடுகைக்கான மானியம் **16,000** ரூபாவிலிருந்து **24,000** ரூபாவிற்கு உயர்த்தப்படவேண்டும்.

3. சொட்டு நீர்ப்பாசனத்தை அறிமுகம் செய்தல்வேண்டும்.

4. உரப்பாவனைக்கு ஊக்குவிப்பு.

மேற்படி எமது கோரிக்கைக்கு அமைய மாற்றியமைக்கப்பட்ட இத்திட்டத்தை **"North Special Programme to Develop Coconut Land"** என்னும் தலைப்பில் தேவையான நிதியாகிய 1016 ரூபா மில்லியனைப் பெறும் பொருட்டு பெருந்தோட்ட அமைச்சுக்கு சமர்ப்பித்துள்ளார்கள்.

**எடுக்கப்பட்ட நடவடிக்கைகள்**

எமது இத்திட்டத்திற்கு ஏதோவொரு வழியில் நிதிவளம் கிடைத்தால் உடனடியாக ஆரம்பிக்கக்கூடிய வகையில், முன்கூட்டியே சில ஆரம்ப நடவடிக்கைகளைச் செய்து, ஆயத்தமாக இருக்கவேண்டியதாகும். அண்மையில் தெங்கு மானியத்திட்டத்தின்கீழ் தென்னை மீள்நடுகைக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டன. நான்கு தெங்கு அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் தற்பொழுது விண்ணப்பப் படிவங்களை ஏற்று, அட்டவணைப்படுத்தி வருகின்றார்கள்.

ஏப்ரல் மாதம் 30 ஆம் திகதிவரை கிடைக்கப்பெற்ற முழுமானிய விண்ணப்பங்களின் எண்ணிக்கை 4151 ஆகும். புனர்நிர்மாணம் செய்யப்படவேண்டிய விஸ்தீரணம் சுமார் 8179 ஏக்கர் ஆகும். அவற்றைத்தவிர, தொடர்ந்து வரும் விண்ணப்பப்படிவங்களும் ஏற்றுக் கொள்ளப்பட்டு இப்பட்டியலில் சேர்க்கப்பட்டு வருடாவருடம் கிடைக்கும் உதவிப்பணத்திற்கேற்ப, மீள்நடுகைக்கான மானிய அனுமதிப்பத்திரம் வரையறுக்கப்பட்ட அளவில் வழங்கப்பட்டு, தென்னை புனர்நிர்மாண வேலைகள் முன்னெடுத்துச் செல்லப்படும்.



இந்த ஆண்டுக்கு இதுவரை எந்தவொரு நிதிவழங்கும் நிறுவனங்களிடமும் இருந்து, நிதி ஒதுக்கீடு கிடைக்கப்பெற்றதாக எமது பிரதான காரியாலயத்திற்குப் பெருந்தோட்ட அமைச்சிடமிருந்து தகவல் கிடைக்கவில்லை. ஆகவே, இவ்வாண்டு எமது சாதாரண வருடாந்த ஒதுக்கீடாகிய ஆகிய 200 ஏக்கர் விஸ்தீரணம் மட்டும் மீள்நடுகை செய்வதற்கு, எமது பிரதான காரியாலயம் அனுமதிவழங்கியுள்ளது. இதற்கான நடவடிக்கைகள் முன்னெடுத்துச் செல்லப்படுகின்றன. 200 ஏக்கர் மீள்நடுகைக்குத் தேவையான 14,000 தென்னம்பிள்ளைகளைப் பெரும்போகத்தில் வழங்குவதற்காக, ஏற்கனவே விதைத் தேங்காய்கள் தென்னை ஆராய்ச்சி ஸ்தாபனத்தினால் சிபாரிசுசெய்யப்பட்ட, தாய்மரத தென்னம் தோட்டங்களிலிருந்து கொணடுவரப்பட்டு - அச்சுவேலியிலும், கிளிநொச்சியிலும் தென்னைநாற்று மேடைகள் அமைக்கப்பட்டுப் பராமரிக்கப்படுகின்றன.


இந்த மீள்நடுகைத் திட்டத்தைத் துரிதப்படுத்தப்படவேண்டுமாயின் அல்லது ஒரு காலவரையறைக்குள் முடிக்கப்படவேண்டுமானால், வெளிநாடுகளின் உதவி மிக அவசியம் என்பது வெளிப்படையாகத் தெரிகின்றதுடன், யாவருடைய கவனத்தையும் ஈர்க்கும் ஒரு முக்கியமான விடயமாகவும் உள்ளது.

கடந்த 1978 ஆம் ஆண்டு கிழக்கு மாகாணத்தில் வீசிய புயற்காற்றினால்- அங்கு அழிவுற்ற 80 வீதமான தென்னை வளத்தை, ஐரோப்பிய நாடுகளின் நிதியிலிருந்து மீள்நடுகை செய்த திட்டத்தை இதற்கு ஒரு உதாரணமாகக் கொள்ளலாம். ✡

**சி.சிவச்சந்திரன்,**
பிராந்திய முகாமையாளர்,
தெங்குப் பயிர்ச்செய்கைச்சபை -வடக்கு.

# அன்றாடப் பாவனைக்கேற்ற சில பொறிகள்;

**நா**மெல்லாம் இப்போது சந்தைக்கு என்ன வகையான புதிய பொறிகள் வந்தாலும் அல்லது உபகரணங்கள் வந்தாலும்சரி உடனடியாக வாங்க விழைகின்றோம். அப்பொருட்கள் என்ன விலையென்பதைப் பார்ப்பதுமில்லை அல்லது அவைகளைப் பராமரிப்பதற்கு எவ்வளவு




செலவாகும் என்பதை உணர்வதுமில்லை. அத்தோடு, அவ்வகையான பொருட்களால் நமக்கும் சரி, சூழலுக்கும் சரி என்னவகையான பின்விளைவுகள் ஏற்படும் என்பதைக் கூடச் சிந்திப்பதுமில்லை. ஆனால், எமது சூழலிலுள்ள மலிவான அல்லது பாவனைக்குதவாத சிலவகையான மூலப்பொருட்களைக்கொண்டு, எளிய தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி இலகுவான முறையில் பல இயந்திரங்களையும், பொறிவகைகளையும் உருவாக்கிக் கொள்ளமுடியும். இப்படியான பல பொறிகளையும், உபகரணங்களையும் உருவாக்குவதில் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனமும் மற்றும் எமது உள்ளூர்த் திறமைசாலிகள் பலரும் அக்கறை எடுத்து, வெற்றியும் கண்டுள்ளனர். அந்தவகையில், எமது அன்றாடப் பாவனைகளுக்குப் பயன்படக்கூடிய சில பொறிவகைகளின் உருவாக்கமும், அவற்றின் தொழிநுட்பமும் பற்றிச் சற்று ஆராய்வோம்.

பல தரப்பட்ட உணவுப்பொருட்களில் காய்கறிகளும், பழங்களும் எமது போசணைக்கு அதிமுக்கியமானவையாகும். ஆனால், துரதிர்ஷ்டவசமாக இவற்றை நீண்டகாலத்துக்குச் சேமித்து வைத்துப் பயன்படுத்தமுடியாதுள்ளது. ஏனெனில், பழங்கள், காய்கறிகளிலுள்ள அதிகரித்த நீர்த்தன்மை மற்றும் போசணைப் பொருட்கள் காரணமாக - இவை பக்டீரியா, பங்கசு, மதுவம் போன்ற நுண்ணங்கிகளின் தாக்கத்திற்கும் மற்றும் பழங்கள், காய்கறிகளில் இயற்கையாகவேயுள்ள ஓமோன்கள், நொதியங்களின் தொழிற்பாட்டினாலும் விரைவாகப் பழுதடைகின்றன.

இவ்வாறு பழங்கள், காய்கறிகள் பழுதடைவதற்கு மேற்

## குறைந்த செலவில் ஓர் குளிரூட்டி

**பகுதி - 1**

கூறப்பட்ட காரணிகளைவிட, அவற்றின் பூரணதொழிற்பாட்டிற்கு வெப்பநிலை, ஈரப்பதன், வளியிலுள்ள ஒட்சிசன் போன்ற சூழற்காரணிகளும் சாதகமாக அமைகின்றன. எனவே - பழங்கள், காய்கறிகளை உடனடியாக எமது தேவைக்குப் பயன்படுத்தல் வேண்டும். ஆனால், பொதுவாகப் பழங்களும், காய்கறிகளும் ஆண்டொன்றின் குறிப்பிட்ட பருவத்திலேயே அதிக விளைச்சலைக் கொடுப்பதனால், உடனடித்தேவைக்கு உற்பத்தியின் முழுப்பகுதியையும் பயன்பாட்டிற்கு எடுக்கமுடியாது. மேலும் பழங்களும், காய்கறிகளும் பொதுவாக மக்கள் செறிந்துவாழும் நகரை அல்லது பட்டணத்தைவிட்டு அதிகதூரமுள்ள பண்ணைகளிலும், தோட்டங்களிலுமே செய்கைபண்ணப்படுகின்றன. எனவே, இவற்றைப் பழுதடைவதிலிருந்து பாதுகாத்து, உடனடித்தேவைக்கு எடுத்துக்கொள்ளல் என்பது பெரும்பாலும் சாத்தியமற்றதாக அமைகின்றது. அதேவேளை - பழங்களையும், காய்கறிகளையும் அறுவடை செய்த உடனே பயன்படுத்துகையில், அவற்றிலுள்ள போசணைப் பொருட்களின் உச்சப்பயனைப் பெற முடியும் என்பதைக் கருத்திற்கொள்ளவேண்டும்.

ஆகவே - பழங்களையும், காய்கறிகளையும் தேவையானபோது பயன்படுத்திக்கொள்ளத் தகுந்த சேமிப்பு முறைகள் அவசியமாகின்றது. பொருத்தமான பதப்படுத்தல் முறைகளைக் கைக்கொண்டு பழங்களையும், காய்கறிகளையும், அவற்றின் இயற்கைநிலையிலிருந்து வேறோர் நிலைக்கு, மாற்றி பயன்படுத்திக்கொள்ள முடியுமென்பது ஒருபுறமிருக்க, நாம் எவ்வாறு அவற்றை இயற்கைநிலை மாறாது குறைந்தபட்சம் குறிப்பிட்ட சில நாட்களிலாவது பேணமுடியும் என்பதைப் பற்றி சிந்தித்தல் அவசியமாகின்றது. இதற்காக அதிகவிலை கொடுத்து மின்சார குளிரூட்டிகளையோ, குளிர்சாதனப் பெட்டிகளையோ வாங்கவேண்டிய அவசியமில்லை. எமது சூழலுக்கேற்றவாறு ஓர் எளியமுறையில் குளிரூட்டியொன்றை எவ்வாறு தயாரிப்பது என்பது பற்றித் தெரிந்துகொள்வோமானால், அது மிகவும் பயனுள்ளதாக அமையும் என்பதில் சந்தேகமே இல்லை.

ஓரளவு ஆழம்கூடிய, பெரிய அலுமினியத்தாலான அல்லது துருப்பிடிக்காத உருக்கிலான கைபிடிகளற்ற கிண்ணம் ஒன்றை எடுத்துக்கொள்ளுங்கள். கிண்ணத்திற்கு ஏற்றவாறு பெரியளவில் மண்பானையொன்றை உங்களுக்கு அருகாமையிலுள்ள, மண்பானை செய்யுமிடத்தில் பிரத்தியேகமாகச் சொல்லிச் செய்யுங்கள். ஆனால், அப்பானை ஏனைய பானைகளிலிருந்து சற்று வித்தியாசமாக மூடி கொண்டதாகவும் மற்றும் காற்றை உட்புகவிடக்கூடிய துவாரங்கள் சிலவற்றையும், தண்ணீர்விட வாய்வழி ஒன்றைக் கொண்டதாகவும் (படத்தைப் பார்க்க) இருத்தல் வேண்டும்.

(6ஆம் பக்கம் பார்க்க)

ஆக்கம்:- சபாரட்ணம் நகுலேஸ்வரன்
(உதவி விரிவுரையாளர்) விவசாய இரசாயனவியற்துறை.
யாழ். பல்கலைக்கழகம்.
தருவது:- தகவல் தொடர்பு மையம்,
(மாணவர் பகுதி) விவசாயபீடம்.

# தொழில் ரீதியாக குடாநாட்டு மீனவர்களை

**படகு உற்பத்தித் தொழிலில் 40 வருடகாலத் தேர்ச்சி பெற்றிருக்கும் தான் – தற்போது யாழ். குடாநாட்டு மீனவர்களுக்கு வேண்டிய சேவைகளை வழங்கி, அவர்களைத் தொழில் ரீதியாக, பொருளாதார வளமுடையவர்களாக மாற்றவேண்டுமென்ற நோக்கில் தொழிற்சாலையை நடாத்திவருவதாகச் சொல்கிறார், ஈச்சமோட்டையைச் சேர்ந்த செல்வம் சமுத்திர வள தொழிற்சாலை உரிமையாளர் எஸ்.திருச்செல்வம். அவருடனான நேர்காணல்...**

✡ *உங்களுடைய இந்தப் படகு உற்பத்தித் தொழில் முயற்சியின் ஆரம்பம் பற்றிக் கூறுங்கள்?*



எஸ். திருச்செல்வம்

ஆரம்பத்தில் காங்கேசன்துறையில படகு செய்கிற தொழிற்சாலை இயங்கி வந்தது. அங்கதான் நான் வேலைசெய்து வந்தேன். அப்ப எனக்கு ஆரம்பச் சம்பளம் ஒருநாளைக்கு இரண்டு ரூபாதான். பின்னர், ஒருவருடம் கழித்து அதே தொழிற்சாலையில் மேற்பார்வையாளராகக் கடமையாற்றினேன்.

அந்த நாட்களில் இலங்கையில் இயந்திரப் படகுகளே இருக்கவில்லை. நோர்வே அரசாங்கம் தமது படகு உற்பத்திகளை இங்கே அறிமுகப்படுத்துவதற்காக, படகு கட்டும் தொழிலை இங்கு உள்ளவர்களுக்குப் பழக்கினார்கள். இதற்காக நோர்வேயிலிருந்து இலங்கைக்கு வந்த ஸ்லண்டர் என்ற பொறியியலாளர்தான் எனக்குப் படகுகட்டும் தொழிலைப் பழக்கினார். அதற்குப் பின்னர்- இரண்டு வருடம் கழித்து ஊதியம் போதாத காரணத்தால், நானே ஒரு தொழிற்சாலையை ஆரம்பித்து நடத்தி



வந்தேன். 1963 ஆம் ஆண்டு அரச மீன்பிடி இலாகாவில் எனது தொழிற்சாலையைப் பதிவுசெய்து, 1989 ஆம் ஆண்டுவரை நடத்தி வந்தேன்.

பின்னர் - இந்திய இராணுவத்தின் பிரச்சினையுடனும், இலங்கை அரசாங்கம் எமது மீனவர்களை ஊக்குவிக்காத காரணத்தினாலும், அதாவது மீனவர்களை வளரவிடாமல் தடுத்த காரணத்தாலும், அத்துடன் மீனவர்களுக்கான வங்கிக்கடன்கள் வழங்கப்படாமையாலும் எனது படகு உற்பத்தியை அப்படியே கைவிடவேண்டிய நிலையேற்பட்டது.

தற்போது யாழ்ப்பாணத்தில் ஒரு சுமுக நிலை ஏற்பட்டதால் இங்க வந்து செல்வம் சமுத்திரவள தொழிலகத்தினை ஆரம்பித்து நடத்திவருகின்றேன்.



# பொருளாதார வளமாக்குவதே எனது நோக்கம்!


✡ *படகு உற்பத்திக்குத் தேவையான மூலப் பொருட்களை எவ்வாறு பெறுகிறீர்கள்?*

கொழும்பில இருக்கிற கம்பனி ஒன்றின் மூலமாகத்தான் மூலப்பொருளைக் கொள்வனவு செய்கிறேன்.

✡ *குடாநாட்டுக்கான தரைவழிப்பாதை திறந்ததற்குப் பின்னர், வெளிமாவட்டங்களிலிருந்து படகுகள் கொள்வனவு செய்யப்பட்டு இங்கு கொண்டு வரப்படுவதால் உங்கள் தொழிலில் மாற்றங்கள் ஏற்பட்டிருக்கின்றதா?*

உண்மையில் அதால இங்கு படகு உற்பத்தி செய்பவர்களுக்குப் பெரியளவில் தாக்கங்கள் ஏற்பட்டுக்கொண்டிருக்கிறது. அதில முக்கியமான பிரச்சினை என்னவென்றால் - தென்பகுதியில அரசாங்கம் தொழில் முயற்சியாளர்களுக்குப் பெருமளவில் கடன் வசதிகளைச் செய்து கொடுக்கிறதால, அவர்கள் அந்த நிதியைப் பயன்படுத்திப் படகுகளை உற்பத்திசெய்துவிட்டு, இங்க கொண்டுவந்து குறைந்த விலையில் விற்பனை செய்வதுடன், படகுகளைத் திருட்டுத்தனமாக எடுத்துக் கொண்டுவந்தும் இங்குள்ளவர்களுக்கு விற்பனை செய்கிறார்கள்.

இங்க உற்பத்தி செய்கிற படகுகள் மீன்பிடி இலாகாவில் பதிவுசெய்யப்பட்டு, அவர்களால் தரப்படுகின்ற அனுமதிச் சான்றிதழ்களையும் பெற்று, அதற்குரிய இலக்கங்களும் கொடுக்கப்பட்டுத்தான் விற்பனை செய்யப்படவேண்டும். ஆனால், யாழ்ப்பாணத்தில இருக்கின்ற மீன்பிடி இலாகாவில் அது ஒரு பாரிய பிரச்சினையாகவே இருந்துவருகிறது. அதற்குரிய பொறியியலாளர் இங்கில்லை. மன்னாரிலிருந்துதான் ஒரு உத்தியோகத்தர் இரண்டு மாதங்களுக்கு ஒருதடவை இங்கவந்து அதற்குரிய சான்றிதழ் களை வழங்கிவருகின்றார். அதனாலும் எங்களுக்குத் தாக்கமிருக்கிறது.



✡ *யாழ்.குடாநாட்டு மீனவர்களின் தொழிலுக்குத் தேவையான படகு வசதிகள் இருக்கிறதா?*

இல்லை. தற்போது யு.என்.எச்.சி.ஆர். நிறுவனம் வந்து என்னுடன் தொடர்பு கொண்டு வடக்கு - கிழக்குப் பகுதி மீனவர்களுக்கென நிதியுதவி கிடைக்க இருக்கிறது. அதனால், சமாசம் மூலமாகவோ அல்லது சங்கங்கள் மூலமாகவோ இலவசமாகப் படகுகள் வழங்கப்பட இருக்கிறது என்று கூறி, அதற்குரிய மதிப்பீடுகளை எடுத்துக்கொண்டு போயிருக்கிறார்கள்.

அதற்குப் பின்னர் மீனவர்கள் மத்தியில் பெரியதொரு எதிர்பார்ப்பு இருக்கிறது. ஏனென்றால், 'அரசாங்கம் எங்களுக்கு இலவசமாகப் படகுகள் தரப்போகிறார்கள். அப்படியொரு உதவி எமது மீனவர்களுக்குக் கிடைக்குமென்றால் ஓரளவு அவர்களின் தொழிலுக்குப் போதிய படகுகள் கிடைக்க வாய்ப்பிருக்கிறது.

✡ *கடல் வலயச் சட்டங்கள் ஏற்படுத்தப்பட்டதோடு, இந்திய மீனவர்கள் எமது கடற்பரப்பிற்குள் அத்துமீறி நுழைந்து தொழில் செய்து வருவதால், மீனவர்களின் தொழில் வளங்களில் என்ன மாதிரியான பின்னடைவுகள் ஏற்பட்டிருக்கிறது?*

உண்மையில் கடல் வலயத் தடைச்சட்டங்கள் முற்றுமுழுதாக நீக்கப்படாத காரணத்தினால், சுதந்திரமாகத் தொழிலில் ஈடுபடமுடியாமல் இருக்கிறது.

நெடுந்தீவுக் கடற்பகுதியில் அண்மைக் காலமாக இந்திய மீனவர்களின் ஆக்கிரமிப்பு அதிகரித்துவருகிறது. கிழமையில் மூன்று நாட்கள்தான் இலங்கை மீனவர்கள் கடலுக்குச் சென்று மீன்பிடிக்க வேண்டிய நிலை ஏற்பட்டிருக்கிறது. அத்துடன், இந்திய மீனவர்களால் மீன்பிடி உபகரணங்களும் சேதமாக்கப்பட்டு வருகிறது.

**சந்திப்பு - மயில்வாகனம்**

# குடாநாட்டு சந்தை நிலவரம்

| பொருட்கள் | சுன்னாகம் | சாவகச்சேரி | திருநெல்வேலி | யாழ்ப்பாணம் | சங்கானை | மருதனார்மடம் | நெல்லியடி |
|---|---|---|---|---|---|---|---|
| பயிற்றங்காய் | 60/= | 20/= | 50/= | 60/= | 20/= | 40/= | 30/= |
| உருளைக்கிழங்கு | 85/= | 60/= | 90/= | 70/= | 90/= | 80/= | 75/= |
| கத்தரிக்காய் | 25/= | 10/= | 15/= | 30/= | 10/= | 25/= | 30/= |
| பாகற்காய் | 40/= | 35/= | 60/= | 60/= | 60/= | 60/= | 60/= |
| வெண்டிக்காய் | 20/= | 15/= | 25/= | 45/= | 20/= | 20/= | 40/= |
| கரட் | 60/= | 50/= | 60/= | 80/= | 60/= | 70/= | 80/= |
| பீற்றூட் | 30/= | 20/= | 35/= | 40/= | 50/= | 40/= | 40/= |
| முருங்கைக்காய் | 80/= | 100/= | 200/= | * | 200/= | 150/= | 100/= |
| வெங்காயம் | 40/= | 30/= | 35/= | 35/= | 35/= | 30/= | 40/= |
| பச்சைமிளகாய் | 60/= | 30/= | 45/= | 60/= | 45/= | 60/= | 60/= |

## அன்றாட....

இதனைவிட- கிண்ணத்தின் சுவருக்கும், மண்பானையின் சுவருக்கும், இடையில் போதுமான இடைவெளி இருப்பதை உறுதி செய்தல் வேண்டும். ஏனெனில், இவ்விடைவெளியினுள்ளேதான் தண்ணீரை நிரப்ப வேண்டியுள்ளது.

இப்போது நீங்கள் ஓர் எளிய குளிரூட்டியைத் தயாரித்து விட்டீர்கள். சரி! இதனை எவ்வாறு செயற்படுத்துவது என்பது பற்றி ஆராய்கையில், முதலில் நீங்கள் சேமிக்கவுள்ள பழங்களை அல்லது காய்கறிகளைப் பானையினுள்ளே உள்ள கிண்ணத்தினுள் அடைத்து, பானையின் வாயினை மூடியினால் மூடுங்கள். அடுத்து நீருக்கான வாய்வழித் துவாரம் மூலம் தண்ணீரைப் பானையினுள் நிரப்புங்கள். இச்சந்தர்ப்பத்தில் பொருட்களுள்ள கிண்ணத்தினுள் நீர் செல்லாதவாறு கவனித்தல் வேண்டும்.

இப்போது உங்கள் வீட்டுக் குளிரூட்டி செயற்பட ஆரம்பித்துள்ளது. ஆனால், ஒவ்வொருநாளும் நீர்மட்டத்தைச் சரிபார்த்து நீரை நிரப்புங்கள். எல்லாவற்றையும் சரிவரச் செய்திருப்பீர்களானால் நீங்கள் அடைத்த காய்கறிகளை அல்லது பழங்களை குறைந்த பட்சம் மூன்று அல்லது நான்கு நாட்களுக்கு, அவற்றினுடைய இயற்கைநிலை மாறாது சேமித்துக்கொள்ள முடியும் என்பதை அறிவீர்கள். உங்கள் குளிரூட்டியில் என்ன முறையில் பொருட்கள் குளிரூட்டப்படுகின்றன என்பது பற்றிச் சிந்திக்கையில், நீங்கள் பானையினுள் விட்ட தண்ணீர் ஆவியாதல் மூலம் பானையினுள் ஓர் குளிர்நிலைமையைத் தோற்றுவிக்கின்றது. இச்சந்தர்ப்பம் காரணமாகவே காய்கறிகள் அல்லது பழங்கள் அதன் இயற்கைநிலை மாறாது பேணப்படுகின்றன.

இவ்வகையான குளிரூட்டிகளை நாம் சாதாரணமாக வீடுகளில் தயாரித்துக் கொள்ள முடியும் என்பதைவிட, இவ்வகையான குளிரூட்டிகளை உருவாக்குவதை ஓர் கைத்தொழிலாக எடுத்து யாரும் செய்வீர்களானால் உங்களது பொருளாதார நிலையை உயர்த்திக்கொள்ள முடியும் என்பதில் எவ்வித ஐயமுமில்லை.

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanadu.com

**சிந்தனைக்கு**

பொய்படும் ஒன்றோ புனைபூணும் கை அறியாப்
பேதை வினைமேற் கொளின்

- திருக்குறள்.

# நமது நோக்கு

## தப்பித்தலுக்கும் அப்பால்...!

சர்வதேசக் கடற்பரப்பில் விடுதலைப் புலிகளின் எண்ணெய்த் தாங்கிக் கப்பல் - போர் நிறுத்தத்திற்கு விரோதமாகவும், சர்வதேச கடற்சட்டங்களை மீறியதுமான வகையில் கடற்படையினால் தாக்கி மூழ்கடிக்கப்பட்டதுடன், அதில் பயணம் செய்த பன்னிரெண்டு போராளிகள் கைது செய்யப்பட்டு, இதுவரை அவர்களின் நிலைபற்றி எதுவித தகவல்களும் அறிவிக்கப்படாத நிலையில் -

மேற்படி சம்பவத்திற்கும், தமக்கும் அதற்கும் எதுவித தொடர்புமில்லை எனக் காட்டுவதற்கு அரசாங்கத்தரப்பில் பெருமுயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

விடுதலைப் புலிகள், இந்த விவகாரம் தொடர்பாகக் கண்காணிப்புக்குழுவிடமிருந்து மிக விரைவான பதிலை எதிர்பார்த்து வலியுறுத்திவரும் சூழலிலும் -

கைதான போராளிகளுக்கு ஏதும் நேரின், அதனாலேற்படும் பாரதூரமான விளைவுகளுக்கு கடற்படையே பொறுப்பு என உறுதியாக அறிவித்திருப்பதாலும்,

இந்த விடயத்தை முன்பு செய்தவை போல மூடிமறைத்துவிடவோ, திரிவுபடுத்திவிடவோ முடியாத நிலைக்கு அரசாங்கம் ஆளாயிருக்கிறது.

ஏற்கனவே - கப்பல் மூழ்கடிக்கப்பட்டது தொடர்பாக, கடற்படைத்தரப்பு வெளியிட்ட தகவல்களுக்கும் ஜனாதிபதி செயலகம் வெளியிட்ட தகவல்களுக்குமிடையே முக்கியமான முரண்பாடுகள் இருப்பது வெளித்தெரிய வந்திருப்பதும் -

கண்காணிப்புக் குழுவை சம்பவ இடத்துக்கு அழைத்துச் செல்வதில் காட்டப்பட்ட தாமதம் - புலிகளிடம் கடுமையான ஆட்சேபத்தை தோற்றுவித்திருப்பதும் -

அரசாங்கத்தை உண்மையை ஒத்துக்கொள்ள வேண்டிய நிலைக்கு அழுத்தியிருக்கின்றன.

இந்த விவகாரத்தில் - ஆரம்பம் முதலே கடற்படை அடாவடித்தனமாக, தன்னிச்சையாக நடந்துகொண்டமையானது-

குறிப்பாக -

சர்வதேச கடற்பரப்பில் வைத்து கப்பலை வழிமறித்தமை, சோதனைக்கு கண்காணிப்புக்குழு வரவழைக்காமை, போராளிகளை கைதுசெய்துவிட்டு அதனை மறைத்தமை, கப்பலைத் தாக்கி மூழ்கடித்தமை எனப் பல்வேறு அப்பட்டமான மீறல்களையும் செய்துள்ளமையானது - இன்று உலகின் கவனத்திற்கு வெளிவந்திருக்கும் நிலையில்,

இந்தச் சிக்கலிலிருந்து தன்னை விடுவித்துக்கொள்வதற்கு, தப்பித்துக்கொள்வதற்கான வழிகளை ரணில் அரசாங்கம் தற்போது நாடியிருக்கின்றது.

இதன் முக்கியமான வெளிப்பாடே - பிரதமர், தனது அமைச்சரவைச் சகாக்களுடன் நடாத்திய கலந்துரையாடலும், அதுபற்றி ஊடகங்கள் வழியே கசிய விடப்பட்டதுமாகும்.

கப்பல் மீதான தாக்குதல் பற்றி பாதுகாப்பு அமைச்சருக்கோ, கடற்படைத் தளபதி நாட்டில் இல்லாத நிலையில் தற்காலிகமாகப் பொறுப்பிலிருந்த கடற்படைத் தலைமை அதிகாரிக்கோ தெரிவிக்கப்படவில்லை எனக் கூறியிருக்கும் பிரதமர்,

சமாதான முயற்சிகளைக் குழப்பும் வகையில் மேற்கொள்ளப்பட்ட சதிமுயற்சிகளில் ஒன்றாகவே - விடுதலைப் புலிகளின் கப்பல் தாக்கியழிக்கப்பட்ட சம்பவத்தைக் கருத வேண்டியுள்ளது என்று தெரிவித்திருக்கிறார்.

இங்கு பிரதமர் - இந்த விடயத்தை சதிமுயற்சியாக குறிப்பிட்டிருப்பதில் உண்மை இருந்தாலும் - அவர், பாதுகாப்பு அமைச்சருக்கோ, கடற்படைத் தலைமை அதிகாரிக்கோ தெரியாமல் தாக்குதல் நடந்திருப்பதாகக் கூறுவது - பழியிலிருந்து விலகும் அவரது நகர்வையும், அதேவேளை - படைகளைக் கட்டுப்படுத்தமுடியாத இயலாத்தன்மையையும், பலவீனத்தையும் எடுத்துக் காட்டுகிறது.

அப்படியானால் - பாதுகாப்புத்துறைக்கென ஒரு அமைச்சரவை நியமித்திருக்கவேண்டிய தேவை ஏன் வந்தது என்ற கேள்வியும் இங்கு பலமாகவே எழுகின்றது.

மிக முக்கியமான, அதிலும் போர்நிறுத்தத்தை மீறுகின்ற, சர்வதேச கடற்சட்டங்களை மதிக்காத ஒரு தாக்குதலை மேற்கொள்ளும்போது - அதுபற்றி கடற்படைத் தளபதியின் பொறுப்பிலிருப்பவருக்கே தெரியாதென்றால், அதன் உள்ளார்த்தம் என்னவென்றும் ஆராயப்படவேண்டியதாகிறது.

குறிப்பிட்ட தாக்குதலுக்காக - இந்தியாவின் உதவி பெறப்பட்டிருக்கும் நிலையிலும், கப்பலின் நகர்வு பற்றி நீண்ட கண்காணிப்பு இடம்பெற்றதாகக் கடற்படையே தகவல் வெளியிட்டிருக்கும்போதும் ஐந்துக்கும் அதிகமான கடற்படைக் கலங்கள் ஒரேவேளை நடவடிக்கையொன்றில் பங்கு பற்றியிருக்கும் வேளையிலும் -

இவையெல்லாம், கடற்படைத் தளபதியின் பொறுப்பிலிருந்தவருக்குத் தெரியாமல் நடந்ததென்றால் - எவர்தான் நம்பக்கூடும்.

அப்படித் தெரியாமல் நடந்ததுதான் உண்மையெனின்- அது, மிகப்பாரதூரமான நிலையையும், இனிவருங்காலத்தில் இதுபோன்ற சம்பவங்கள் தொடரலாம் என்ற அச்சுறுத்தலையும்தான் சுட்டிநிற்கின்றது.

கடற்படைத் தலைமையதிகாரியைவிட, கடற்படையைக் கட்டுப்படுத்துவதற்குரிய அதிகாரத்தை கொண்டிருப்பார் யார் என்பதும், இந்தியாவின் உதவியை - தலைமை அறியாமலேயே கோரிப் பெறுபவர் யாரென்றும் தொட்டு ஏராளம் வினாக்கள் இங்கு பூதாகரமாகின்றன.

இவையெல்லாம், அமைதிச் சூழலுக்கான பேராபத்தையே காட்டுகின்றன.

பிரதமரின் மேற்படி அறிவிப்பு - அவர், கப்பல் மூழ்கடிப்பு விவகாரத்திலிருந்து தன்னைத் தப்பித்துக்கொள்ள முயல்கின்றார் என்ற அளவில் மட்டுமல்லாது - அதனையும் விட ஏராளம் அச்சுறுத்தல்களையும், ஆபத்துக்களையும் சுட்டிநிற்கின்றது என்பதையும் தீவிரமாகக் கவனத்திற்கொள்ள வேண்டியிருக்கிறது.

---

### ரத்வத்த மற்றும் புதல்வர்கள் உட்பட

# உடதலவின்ன சந்தேகநபர்களுக்கு பிணை வழங்க சட்டமா அதிபர் மறுப்பு!

முன்னாள் பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் ஜெனரல் அனுருத்த ரத்வத்த மற்றும் அவரது புதல்வர்கள் உட்பட, உடதலவின்ன படுகொலைச் சம்பவத்துடன் தொடர்புடைய 15 சந்தேகநபர்களைப் பிணையில் விடுவிப்பதற்குச் சட்டமா அதிபர் மறுப்புத் தெரிவித்துள்ளார்.

கொழும்பு உயர்நீதிமன்றத்தில் மூன்று நீதிபதிகள் கொண்ட குழு முன்னிலையில் விசாரணை செய்யப்பட்டுவரும் இந்தச் சந்தேகநபர்களுக்கு, பிணை வழங்குவது தொடர்பாக சட்டமா அதிபர் விடுத்துள்ள எழுத்துமூல அறிக்கையில் இந்த மறுப்புத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தற்போது இடம்பெற்றுக் கொண்டிருக்கும் உடதலவின்ன வழக்கு விசாரணையில் - சம்பவத்தை நேரில் கண்டவர்களின் சாட்சியங்களைப் பதிவுசெய்யும் நடவடிக்கைகள் இன்னும் பூர்த்தியாகவில்லை. இதனால், இந்த நபர்களுக்கு பிணை வழங்குவதற்குச் சட்டமா அதிபர் மறுப்புத் தெரிவித்துள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

## மருத்துவர் போராட்டம் தொடர்கிறது; நோயாளர்கள் பெரும் பாதிப்பு!

(கொழும்பு)

நாடு முழுவதும் உள்ள அரசாங்க வைத்தியசாலைகளில், அரச மருத்துவர்கள் மேற்கொண்டிருக்கும் வேலைநிறுத்தப் போராட்டத்தினால், வைத்தியசேவைகள் பாதிக்கப்பட்டுள்ளன.

அரச வைத்தியசாலைகளின் வெளிநோயாளர் பிரிவுகளில் எண்பது சதவீதமானவை இயங்கவில்லையென, சுகாதார அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்தன.

இதனால், பெருமளவு நோயாளர்கள் தனியார் வைத்தியசாலைகளை நோக்கிப் படையெடுத்துவருவதாகவும், சில தனியார் மருந்தகங்களில் மருந்துப்பொருள்கள் அதிகரித்த விலைக்கு விற்கப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

அவசரசிகிச்சைகளைத் தாம் மேற்கொள்ளப்போவதாக, அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் தீர்மானம் எடுத்திருந்தபோதிலும், அத்தீர்மானத்துக்கு முரணான வகையில், சில வைத்தியசாலைகளில் அவசர சிகிச்சைகளையும் மருத்துவர்கள் மேற்கொள்ளவில்லையெனப் புகார்கள் தெரிவிக்கப்பட்டன.

## இரு இளைஞர்கள் மீது தமிழ்க் குழுவினர் தாக்குதல்

### மட்டு வைத்தியசாலை முன்பாக சம்பவம்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு போதனாவைத்தியசாலைக்கு முன்பாக, வீதியால் சென்றுகொண்டிருந்த இரண்டு இளைஞர்களைத் தமிழ்க் குழுவொன்றின் உறுப்பினர்கள் வழிமறித்துத்தாக்கியதாகத் தெரியவருகிறது.

கடந்த திங்கட்கிழமை ஈ.பி.டி.பி. உறுப்பினர் ஒருவர், மட்டக்களப்பு நகரில் வைத்துச் சுட்டுக்கொல்லப்பட்ட சம்பவத்தையடுத்தே, இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இரு இளைஞர்களும் வீதியால் சென்றுகொண்டிருந்தபோது, தமிழ்க்குழு உறுப்பினர்கள் அவர்களை வழிமறித்து - கண்மூடித்தனமாகத் தாக்கிவிட்டு, விடுவித்ததாக மேலும் தெரியவருகிறது.

## வெளிவிவகார அமைச்சில் முக்கியமான மாற்றங்கள்

(கொழும்பு)

வெளிவிவகார அமைச்சின் முக்கிய பதவிகளில் அரசாங்கம் மாற்றங்களைச் செய்துள்ளது.

வெளியுறவு அமைச்சின் செயலாளராக இருந்த நிகால் ரொட்றிக்கோ - சீனாவுக்கான தூதுவராக நியமிக்கப்பட்டுள்ளார். இவரது இடத்துக்கு பேணாட் குணதிலக நியமிக்கப்பட்டுள்ளார்.

இதேவேளை, வெளிவிவகார அமைச்சின் மேலதிகச் செயலாளர்களாக இருந்த ஜே.டி.ஏ.விஜேரட்ண, ஐரோப்பிய யூனியன் மற்றும் பெல்ஜியத்துக்கான தூதுவராகவும், பெர்ணான்டோ ஜெனிவாவிலுள்ள ஐ.நாவுக்கான நிரந்தரப் பிரதிநிதியாகவும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

வெளிவிவகார அமைச்சின் நிர்வாகப் பணிப்பாளர் திஸ்ஸ விஜேயரட்ண இஸ்ரேலுக்கான தூதுவராகவும், லண்டனிலுள்ள இலங்கைத் தூதுவரின் ஆலோசகராக இருந்த டபிள்யூ.ஹெட்டியாராச்சி எகிப்துக்கான தூதுவராகவும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

## அடுத்த சர்வதேச விமானநிலையம் களுத்துறையில் அமைக்கப்படும்!

(கொழும்பு)

இலங்கையின் இரண்டாவது சர்வதேச விமான நிலையத்தை, களுத்துறை மாவட்டத்தில் அமைப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகத் தெரியவருகிறது.

மத்துகம - பன்னேகம என்ற இடத்தில் இலங்கையின் இரண்டாவது சர்வதேச விமான நிலையம் அமைக்கப்படவுள்ளது. ஐயாயிரம் ஏக்கர் நிலப்பரப்பில் இந்த விமான நிலையத்தை அமைக்கத் திட்டமிடப்பட்டிருப்பதாகவும் தெரியவருகிறது.

இந்த விமானநிலைய நிர்மாணப் பணிகள் விரைவில் ஆரம்பிக்கப்படும் என்றும், இதன்மூலம் பெருமளவானோருக்கு வேலைவாய்ப்பைப் பெற்றுக்கொடுக்க முடியுமென்றும் அரசாங்கம் அறிவித்துள்ளது.

## வவுனியாவில் டெங்கு அபாயம் திங்களன்று உயர்மட்ட மாநாடு!

வவுனியாவில் 'டெங்கு' நோய் பரவும் ஆபத்து ஏற்பட்டிருப்பதாக சுகாதார வட்டாரங்கள் எச்சரிக்கை விடுத்துள்ளன.

கடும் காய்ச்சல் காரணமாக வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட 18 வயதான இளைஞர் ஒருவருக்கு டெங்கு நோய் தொற்றியிருப்பது, பரிசோதனையின்போது கண்டறியப்பட்டது.

இதனால், சுற்றாடலை சுத்தமாக வைத்திருக்குமாறும், நுளம்புகள் உற்பத்தியாகும் இடங்களை இனங்கண்டு அழிக்க நடவடிக்கை எடுக்குமாறும் - வவுனியா மாவட்ட பிரதி மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் டொக்டர் கேதீஸ்வரன் கேட்டுள்ளார்.

'டெங்கு' நோய் அபாயம் குறித்து ஆராய்வதற்கு வவுனியாவில் எதிர்வரும் திங்கட்கிழமை உயர்மட்ட மாநாடு ஒன்று நடைபெறவிருப்பது குறிப்பிடத்தக்கது.

## நியமனக்கடிதம் கிடைக்காதோர் மேன்முறையீடு செய்ய ஏற்பாடு!

(கொழும்பு)

நிரந்தர நியமனத்துக்குத் தகைமை பெற்றிருந்த சில தொண்டராசிரியர்களுக்கு - நியமனக் கடிதங்கள் கிடைக்கவில்லை என, வலயக் கல்விப் பணிமனைகளில் புகார் செய்யப்பட்டுள்ளது.

1998 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 24 ஆம் திகதிக்கு முன்னர் தொண்டராசிரியர்களாக இணைந்து - தொடர்ந்தும் பாடசாலைகளில் பணியாற்றி வருபவர்களுக்கே நிரந்தர நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளன.

இவ்வாறு தொடர்ந்தும் கடமையில் ஈடுபட்டிருக்கும் தொண்டராசிரியர்கள் எவருக்காவது நிரந்தர நியமனக்கடிதம் கிடைக்காவிட்டால், மேன்முறையீடு செய்யுமாறும் யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

கற்பிக்கும் பாடசாலை அதிபர் ஊடாக, மேன்முறையீட்டை 20 ஆம் திகதிக்கு முன்னர் வலயக் கல்விப்பணிமனைக்கு அனுப்பிவைத்தால், அதனை - வலயக் கல்விப்பணிமனை, மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளருக்கு அனுப்பிவைக்கும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

# தாமதமாகவரும் ஆசிரியர்கள் மீது பாரபட்சமற்ற கடும் நடவடிக்கை!

### கல்வி அமைச்சு தீர்மானம்

அரசாங்கப் பாடசாலைகளில் கடமையாற்றும் ஆசிரியர்களில் உரிய நேரத்திற்குக் கடமைக்குச் சமூகமளிக்கத் தவறுபவர்கள் மற்றும் பாடசாலை நேரத்தில் உரிய அனுமதி இன்றியோ, லீவு எடுக்காமலோ வெளியில் செல்பவர்கள்மீது கடுமையான நடவடிக்கை மேற்கொள்வதற்கு கல்வி மனிதவள அமைச்சு தீர்மானித்துள்ளது.

ஆசிரியர்கள் ஒழுங்காகக் கடமைக்குச் சமுகமளிப்பதில்லை என்று, தொடர்ச்சியாகக் கிடைத்துவந்த முறைப்பாடுகளையடுத்தே இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

உரிய நேரத்தில் கடமைக்குச் சமுகமளிக்காத ஆசிரியர்கள் விடயத்தில், அதிபர்கள் மிகவும் கண்டிப்பாக நடந்துகொள்ளவேண்டும்.

எட்டு மணிக்கு ஆரம்பிக்கப்படும் பாடசாலைகளில், ஆசிரியர் வரவு கையொப்பப் புத்தகத்தில் காலை 7.45 மணிக்கு அதிபர்கள் சிவப்புக் கோடிட்டு, பின்னர் 8 மணிக்கு இரண்டாவது சிவப்புக் கோடிட்டு வரவுப்பதிவுப் புத்தகத்தை மூடிவிட வேண்டும்.

இந்த முறையைப் பின்பற்றாத அதிபர்களுக்கு எதிராகக் கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும். இது பற்றிய சுற்றுநிருபம் கல்வி மனிதவள அமைச்சினால் தயாரிக்கப்பட்டு வருவதாகவும், விரைவில் இந்தச் சுற்றுநிருபம் வெளியிடப்படும் எனவும் கல்வி அமைச்சு உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

# பண்டா கொள்கையில் மீண்டும் இனவெறி தூண்டுதலா?

சந்திரிகா பண்டாரநாயக்க தலைமையிலான பொதுஜன ஐக்கிய முன்னணியின் கொள்கை என்ன? இதற்குப் பதில் தேடுவதற்கு முன், சந்திரிகா அம்மையாரின் - அம்மா சிறிமா அம்மையாரின் ஆட்சியின் ஒரு காலகட்டத்தில் நடந்த ஒரு சம்பவத்தை நினைவுகூருவது பொருத்தமாக இருக்கும் என நினைக்கின்றேன்.

1970 ஆம் ஆண்டு பொதுத்தேர்தலின் பின் - சிறிமா அம்மையார் தலைமையில் ஐக்கிய முன்னணி ஆட்சிக்கு வந்தது. இந்த முன்னணியில் - சிறிலங்கா சுதந்திரக்கட்சி, லங்கா சமசமாஜக்கட்சி, இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி ஆகியன அங்கம்வகித்தன. பொருளாதார மேதை டொக்டர் என்.எம்.பெரேரா நிதிய


ரணில்

மைச்சராகவும், டொக்டர் கொல்வின் ஆர்.டி. சில்வா பெருந்தோட்டத்துறை, அரசியலமைப்பு விவகார அமைச்சராகவும் பதவிவகித்தனர்.

நாட்டின் பொருளாதாரத்தை வளப்படுத்துவதற்காக, இறக்குமதிப் பொருட்களுக்கு நிதியமைச்சர் பல கட்டுப்பாடுகளைக் கொண்டு வந்தார். இதன் விளைவாக உள்நாட்டில் அத்தியாவசிய உணவுப்பொருட்களின் உற்பத்தியில் மக்கள் தீவிரமாக ஈடுபட நேரிட்டது. சும்மா கிடந்த நிலங்கள் எல்லாம் தோட்டச் செய்கைக்கும், பயிர்ச்செய்கைக்கும் பயன்படுத்தப்பட்டன. வடபகுதியிலும் இளைஞர்கள் மிளகாய், வெங்காயம் போன்ற உபவுணவுப் பொருள் உற்பத்தியில் ஈடுபட்டனர்.

உற்பத்திகள் பயன்தருவதற்கு முன் அத்தியாவசிய உணவுப்பொருட்களின் விலைகள் அதிகரித்தன. ஆளும்கட்சிக்குள் குழறுபடி ஏற்பட்டது. விதிக்கப்பட்ட கட்டுப்பாடுகளில் சில தளர்த்தப்பட்டன. இதைத் தொடர்ந்து - ஆளும் கட்சிக்கும், சமசமாஜக் கட்சிக்கும், சுதந்திரக் கட்சிக்கும் மோதல் ஏற்படத் தொடங்கியது. நாடாளுமன்றக் கூட்டங்களிலும், வெளியே பொதுக்கூட்டங்களிலும் சுதந்திரக்கட்சியினர் - பண்டாரநாயக்கவின் கொள்கையையே ஐக்கிய முன்னணி அரசு பின்பற்றுவதாக அடிக்கடி கூறத்தொடங்கினர்.

பண்டாரநாயக்கவின் கொள்கையே - சிறிமா அம்மையார் தலைமையிலான ஐக்கிய முன்னணி அரசின் கொள்கை என்று, சுதந்திரக்கட்சியினர் அடிக்கடி வலியுறுத்தத் தொடங்கினர். சுதந்திரக்கட்சிக்கும், சமசமாஜக் கட்சிக்கும் இடையே - ஆளும் கட்சிக்குள் ஏற்பட்ட பகை, ஒரு தடவை நாடாளுமன்றக் கூட்டம் நடந்துகொண்டு இருக்கையில் சபாநாயகர் ஸ்ரான்லி திலகரத்னவுக்கும், நிதியமைச்சர் டொக்டர் என்.எம். பெரேராவுக்குமிடையில் வாய்த்தர்க்கத்தைக் கொண்டுவந்தது.

இச்சந்தர்ப்பத்தில் ஆத்திரமடைந்த டொக்டர் பெரேரா - சபாநாயகருக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டுவரப்போவதாகத் தெரிவித்தார். இதுதான் சமயம் என்று காத்திருந்த எதிர்க்கட்சித் தலைவர் - ஜே.ஆர் ஜெயவர்த்தன இது அரசாங்கத்தின் தீர்மானமா? என்று குறுக்கிட்டுக் கேட்கவும், பிரதமர் சிறிமா இல்லை என்று பதிலளிக்க வேண்டி ஏற்பட்டது.

ஐக்கிய முன்னணிக்குள் பிளவு ஏற்பட்டது. லங்கா சமசமாஜக் கட்சி, ஆளும் கட்சியிலிருந்து வெளியேறியது. இதன் பின்னரும் நாடாளுமன்றத்தில் நடந்த ஒரு விவாதத்தில் அரசாங்கம் - பண்டாரநாயக்க கொள்கையைத் தொடர்ந்து கடைப்பிடிக்குமா என்று, சுதந்திரக்கட்சி உறுப்பினர் சிலர் பேசினர். இந்த விவாதத்தில் கலந்துகொண்ட சமசமாஜக்கட்சித் தலைவர்களில் ஒருவரான டொக்டர் கொல்வின் ஆர்.டி.சில்வா பேசுகையில், பண்டாரநாயக்க கொள்கை என்றால் என்ன என்ற கேள்வியைத் தொடுத்து, பின்னர் அவரே பதிலும் சொன்னார்.

பண்டாரநாயக்கவின் கொள்கை - ஐக்கிய தேசியக்கட்சியின் ஆட்சியைக் கவிழ்க்கவேண்டும் என்பதும், அந்தக் கட்சி ஆட்சிக்கு வராமல் தடுப்பதுமேதான். இதற்காக அரசியலில் எதையெல்லாம் செய்யமுடியுமோ, அதையே அவர் செய்தார். இதைத்தவிர - பண்டாரநாயக்க வேறு எந்தக் கொள்கை சித்தாந்தத்தையும் கொண்டிருக்கவில்லை என்று விளக்கம் கொடுத்தார்.

இன்று பண்டாரநாயக்காவின் மகள் சந்திரிகா பண்டாரநாயக்க தலைமையிலான, பொதுஜன ஐக்கிய முன்னணியின் கொள்கையும், ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான ஐக்கிய தேசிய முன்னணி ஆட்சியைக் கவிழ்ப்பதையே முக்கிய கொள்கையாகக் கொண்டிருப்பதை - அதன் தலைவர்கள் தெரிவிக்கும் கருத்துக்கள் எடுத்துக்காட்டுகின்றன. ரணில் தலைமையில் ஐக்கிய தேசிய முன்னணி ஆட்சிக்குவந்த நாளிலிருந்து எஸ்.பி.திஸாநாயக்கவுக்குச் சமூர்த்தி விவகார அமைச்சை ஒதுக்கியதை ஏற்றுக்கொள்ள மறுத்து, சத்தியப் பிரமாணம் செய்விக்க மறுத்து வந்ததோடு, தம்மிடம் சகல அதிகாரங்களும் இருப்பதாக ஜனாதிபதி சந்திரிகா அடிக்கடி நினைவூட்டி வந்தார்.

ரணில் அரசின் செயற்பாடுகள் பற்றிக் குறைகூறுவதற்கு - இன்றுவரை சந்திரிகா அம்மையார் தவறவில்லை. தன்னிடமுள்ள அதிகாரங்களில் இன்னும் 75 வீதமானவற்றைத் தாம் பயன்படுத்தவில்லை என்றும் அவர் கூறினார். பொதுஜன ஐக்கிய முன்னணி ஆட்சிக் காலத்தில் சமாதானத்திற்கான போர் என்று புதிய சித்தாந்தத்தை உருவாக்கியதுபோல, ரணிலின் சமாதான நடவடிக்கைகளுக்கும் புதிய முறையில் ஜனாதிபதி ஆதரவு தெரிவித்தார். தாமே இலங்கையில் சமாதானத்தைக் கொண்டு வருவதற்குக் கால்கோள் நாட்டியதாக அடிக்கடி நினைவூட்டுவதற்கும் அம்மையார் தவறியதில்லை. ரணில் இதைச் சொன்னாலும் அதில் திருப்தியடையவில்லை.

பொதுஜன ஐக்கிய முன்னணிப் பிரமுகர்கள் - அடிக்கடி சந்திரிகாதான் நாட்டில் சமாதானத்தை ஏற்படுத்துவதற்கு முதலில் முயற்சி எடுத்தார் என்று மேடைகளில் முழக்கம் இடத் தொடங்கியதுடன், அறிக்கைகளும் வெளியிட்டனர். ரணிலின் சமாதான முயற்சி வெற்றியளித்து, அவரால்தான் சமாதானம் ஏற்பட்டதென்று மக்கள் நம்பினால் - தமக்கு அரசியலில் இடமில்லாமல் போய்விடுமோ என்ற அச்சம் அம்மையாருக்கு ஏற்பட்டுவிட்டது. ரணில் சமாதானமுயற்சியில் வெற்றிபெற்றுவிட்டால், பண்டாரநாயக்க குடும்பத்திற்கே அரசியலில் இடமில்லாமல் போய்விடும் என்ற பயம் அம்மையாரின் தம்பி அனுராவுக்கும் ஏற்பட்டது. பண்டாரநாயக்க குடும்பப் பெயரைக் கெடுப்பதற்கு வெளியிலிருந்து யாரும் முயற்சி செய்யத்தேவையில்லை. அதை அனுராவே கச்சிதமாக நிறைவேற்றி வைப்பார் என்பது நாடறிந்த விடயம்.

சமாதான முயற்சிகளின் மூலம் நாட்டின் பொருளாதார நெருக்கடியைச் சமாளிப்பதும் ரணில் அரசின் திட்டமாகும். சிதைந்துபோன

# தாயக ஆட்சி இன்று தமிழ் இளைஞர் கைகளில்தான்!

வடக்கு- கிழக்கைக் கட்டியெழுப்புவதற்கு நிதி தேவை எனக் குரல் எழுந்தது. உலகநாடுகள் இலங்கையில் சமாதானம் ஏற்படுவதற்குப் போரினால் சீரழிந்துபோன இடங்களை மீளக் கட்டியெழுப்பவும் உதவுவதற்கு முன்வந்தன.

தாய்லாந்து, நோர்வே, ஜேர்மனி எனப் பல நாடுகளிலும் இலங்கை அரசின் பிரதிநிதிகளுக்கும் - விடுதலைப் புலிப் பிரதிநிதிகளுக்குமிடையில் நடைபெற்ற சந்திப்புக்களும், பேச்சுவார்த்தைகளும் சமாதான நடவடிக்கை


சந்திரிகா

களை முன்னெடுத்துச் செல்லவுதவின. இவற்றின் பயனாகத்தான் ஜப்பான் தலைநகர் ரோக்கியோவில் உதவிவழங்கும் நாடுகளின் மாநாடு நடைபெறுவதற்கு வழிவகுத்தன. ஆயினும், இதுவரை நடைபெற்ற சந்திப்புக்களிலும், பேச்சுக்களிலும் மேற்கொள்ளப்பட்ட எந்த முடிவுகளும் - பாதிக்கப்பட்ட மக்கள் நிவாரணம் பெறுவதற்கான செயற்பாடுகள் எதுவும் நடைபெற வழிவகுக்கவில்லை.

இதனால், பாதிக்கப்பட்ட தமிழ்மக்கள் நிவாரணம் பெறக்கூடிய - சிதைந்துபோன வடக்கு - கிழக்கை மீளக்கட்டியெழுப்பக் கூடிய திட்டங்களை, நிறைவேற்றுவதற்கு அதிகாரமுள்ள கட்டமைப்பைக் கொண்ட - இடைக்கால நிர்வாகசபையை அமைக்க, வேண்டும் என்ற கோரிக்கையை விடுதலைப் புலிகள் முன்வைத்தனர். இடைக்கால நிர்வாக சபை அமைக்க அரசியல் அமைப்பில் இடமில்லையெனச் சர்ச்சை கிளம்பியது. அரசியல் சாசனத்திற்குப் புறம்பாக இடைக்கால நிர்வாகசபையை அமைக்கலாம் என்று, தமிழ் மக்கள் சார்பில் யோசனை தெரிவிக்கப்பட்டது.

அரசியல் சாசனத்திற்குப் புறம்பாக இடைக்கால நிர்வாகசபையை நிறுவ முயற்சிசெய்தால் அல்லது அமைப்பதற்கு நடவடிக்கை எடுத்தால், ரணில் அரசு மீது ஜனாதிபதி நடவடிக்கை எடுப்பார் என்று பொதுஜன ஐக்கிய முன்னணி மிரட்டியது. விடுதலைப் புலிகளின் விருப்பப்படி - அவர்களுக்கு இடைக்கால நிர்வாகம் வழங்கக்கூடாது என ஜே.வி.பியும், பொதுஜன ஐக்கிய முன்னணியும் எதிர்ப்புத் தெரிவித்தன. புத்தபிக்குகள் சிலர் எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்திலும் இறங்கினர்.

இடைக்கால நிர்வாகசபை விடுதலைப் புலிகளுக்கு மட்டும் என அமைக்கமுடியாது. மற்றையோரும் இதில் பங்குபற்ற வேண்டும் என்று ஜனாதிபதி சந்திரிகா - இடையில் ஒரு கருத்துத் தெரிவித்தார். ஈ.பி.டி.பி. தனக்கும் இடைக்கால நிர்வாகசபையில் இடம்வேண்டும் என்று கேட்டது. தங்களுக்கும் இடைக்கால நிர்வாகசபையில் இடம்தரவேண்டும் என்றது முஸ்லிம் காங்கிரஸ். இடைக்கால நிர்வாக சபை - அரசியல் சாசனத்திற்கு முரணாக அமைக்கப்பட்டால், ஜனாதிபதி பார்த்துக் கொண்டிருக்கமாட்டார், ரணில் ஆட்சியைக் கலைத்து, ஆட்சிப் பொறுப்பை அவர் எடுத்துக் கொள்வார் என்று - சந்திரிகாவின் தம்பியும், நாடாளுமன்ற உறுப்பினருமான அனுரா பண்டாரநாயக்க எச்சரித்தார்.

லொத்தர்சபையை எடுத்துக்கொண்டது போல, தகவல் தொடர்பு அமைச்சையும், உள்நாட்டு அலுவல்கள் அமைச்சையும் ஜனாதிபதி எடுத்துக்கொள்வார் என்றும் அனுரா கூறினார். இதெல்லாம் மேடைப்பேச்சுத்தான். இதில் பாரதூரமாக எதுவுமில்லை என்று ஜனாதிபதியின் அரசியல் ஆலோசகரும், நாடாளுமன்ற உறுப்பினருமான முன்னாள் வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் - அனுராவை மட்டந்தட்டிக் கருத்து வெளியிட்டார்.

லொத்தர்சபை விவகாரம் அடுத்து எடுக்கப்படவிருக்கும் நடவடிக்கைகளுக்கான முன்னோட்டமே என்று அனுரா தொடர்ந்து கூறிவருகிறார். ஆனால், லொத்தர்சபை விவகாரம் இன்னமும் அரசியல் சாசன சர்ச்சைக்குள்ளேயே இருக்கின்றது. இதற்கு இன்னமும் முடிவு கட்டப்படவில்லை.

இந்நிலையில், ரோக்கியோ மாநாடு பற்றி சிறிலங்கா சுதந்திரக்கட்சி ஊடகப்பேச்சாளரான சரத் அமுனுகம, அந்த மாநாட்டில் வழங்க உறுதியளிக்கப்பட்டிருக்கும் பணம்-நாட்டு மக்களை மேலும் கடனாளியாக்கும் என்றும் கூறியிருக்கிறார். சிறிலங்கா சுதந்திரக் கட்சி ஆட்சிபீடத்திலிருந்தால், வெளிநாட்டுக் கடன் உதவியை வேண்டாம் என்று நிராகரித்துவிடும் என்பதுபோலச் சரத் அமுனுகம பேசிவருகிறார். இதேசமயம் சரத் அமுனுகமவும், சிறிலங்கா சுதந்திரக்கட்சியும் - விடுதலைப் புலிகள் பற்றி நாட்டு மக்களுக்கும், அரசாங்கத்திற்கும் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

விடுதலைப் புலிகள் ரோக்கியோ மாநாட்டில் கலந்துகொள்ளவில்லை. இதனால், தமக்கு எதுவும் பாதிப்பில்லை என்றும் அரசு கூறிக் கொண்டாலும், அந்தப் பாதிப்பிலிருந்து மீண்டு கொள்வதற்காக, விடுதலைப் புலிகள் தொடர்ந்தும் பேச்சுவார்த்தையில் கலந்துகொள்ள வேண்டும் என்று, வெளிநாடுகள் மூலம் அழுத்தம் கொடுத்துவருகின்றது. விடுதலைப் புலிகள் மீண்டும் தாயகக் கோட்பாடு பற்றிப் பேசுகின்றார்கள் என்றும், இதனால் படைகளை உசார் நிலையில் வைக்கவேண்டும் என்றும், அரசு விழிப்பாக இருக்கவேண்டும் என்றும் சரத் அமுனுகம எச்சரித்திருக்கிறார்.

சிறிலங்கா சுதந்திரக்கட்சி இப்படி ஒரு அறிக்கையை வெளியிட்டிருக்கின்றது.

தாயகக்கோட்பாட்டை யார், எப்போது கைவிட்டார்கள்? 1956 ஆம் ஆண்டில் அம்பாறை - இங்கினியாகலயில் தமிழர் மீது சிங்களக் குடியேற்றவாசிகள் தாக்குதல் நடத்தி விரட்டியடித்தபோது - தமிழ்மக்கள் தங்கள் தாயகமான வட-கிழக்குப் பகுதிக்குத் தானே ஓடித் தஞ்சமடைந்தனர். 1958, 1977, 1983 ஆம் ஆண்டுகளில் சிங்களப் பேரினவாதிகளும், இனவாத அரசபடைகளும் - தமிழர் மீது இனவாதத் தாக்குதல் நடத்தி உயிர், உடமைகளை அழித்தபோது - எஞ்சியவர்கள் தங்கள் உயிரைப் பாதுகாத்துக் கொள்வதற்காக அவர்களைக் கப்பல்களில் அனுப்பி வைத்தது, அவர்களின் தாயகமான வட-கிழக்குப் பகுதிகளுக்குத்தானே.

இந்தத் தாயகத்தைப் பாதுகாப்பதற்காகத் தானே - தமிழர்கள் தந்தை செல்வநாயகம் தலைமையில் காந்திய வழியில் சாத்வீகப் போராட்டம் நடத்தினர். ஜனநாயக முறையில் தமிழ்மக்கள் வழங்கிய ஆணைகளும், சாத்வீகப் போராட்டங்களும் பெரும்பான்மை ஜனநாயகத்தினாலும், ஆயுதப்படைகளினாலும் நிராகரிக்கப்பட்டு, ஆயுத பலத்தினால் அடக்கியொடுக்கப்பட்டபோதுதான், தமிழ் இளைஞர்கள் ஆயுதமேந்திப் போராடத் தொடங்கினார்கள். இப்போது புலிகள் மீண்டும் தாயகக் கோட்பாடு பற்றிப் பேசுகிறார்கள் என்றும், ஆயுதப்படைகளை உசார்நிலையில் வைக்க வேண்டும் என்றும் சிறிலங்கா சுதந்திரக்கட்சி தெரிவிக்கின்றது.

புலிகளை அழித்தொழிக்கத் திரட்டப்பட்ட ஆயுதப்படைகளிலிருந்து - 60 ஆயிரத்திற்கு மேற்பட்டவர்கள் ஆயுதங்களுடன் தப்பியோடி நாட்டில் கொலை, கொள்ளைகளில் ஈடுபட்டு வருவதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன. இவர்களை இன்னமும் பிடிப்பதற்குப் படையினரால் முடியவில்லை. ஒருவேளை, அவர்கள் படைகளுக்கு வெளியேயிருந்து போரிடுவதாகச் சுதந்திரக்கட்சி கருதுகிறதோ? இந்தப் படைகளை உஷார் நிலையில் வைத்துப் போர் புரியப் போகிறார்களா? மக்களைத் துன்புறுத்துவார்களா?

சிறிலங்கா சுதந்திரக்கட்சி - மீண்டும் பண்டாரநாயக்கா கொள்கையை பின்பற்ற நினைத்திருக்கின்றது. ஆட்சி அதிகாரத்தைக்


சிறிமா

கைப்பற்றுவதற்குச் சந்திரிகாவின் தகப்பன் எஸ். டபிள்யூ.ஆர்.டி. பண்டாரநாயக்க எப்படிச் சிங்களத்தை மட்டும் அரியணையில் ஏற்றுவேன் என்று, நாட்டு மக்கள் மத்தியில் மொழிவெறியைக் கிளப்பி, இனவெறியைத் தூண்டிவிட்டாரோ, அதேவழியைப் பின்பற்றுவதற்குச் சுதந்திரக்கட்சி மீண்டும் படாதபாடுபடுகின்றது.

பண்டாரநாயக்க காலத்திலும், சிறிமாவோ பண்டாரநாயக்க காலத்திலும் தமிழ்த்தலைவர்கள் அகிம்சையைக் கடைப்பிடித்தார்கள்.

இதனால், தமிழ்மக்களை ஆயுதபலம் கொண்டு அடக்கி, அரசியலில் அவர்களை அடிமையாக்கித் தமது அதிகாரப் பதவியில் வெற்றிபெற முடிந்தது. இன்று காலம் மாறிவிட்டது. தமிழ் இளைஞர்கள் இன்று ஆயுதப்படைகளைக்கொண்ட மாற்று அரசாட்சியுடன் தமது தாயகத்தையும், மக்களையும் கௌரவித்தது டன் பாதுகாத்து வருகின்றனர்.

தாயகத்தில் மூன்றில் ஒரு பகுதி இன்னமும் அரசின் இராணுவக் கட்டுப்பாட்டின் கீழ் இருந்தாலும், தமிழ் மக்கள் - தமிழர்களின் ஆட்சியில், அதன் கட்டுப்பாட்டில்தான் வாழ்ந்து வருகின்றனர். இதற்கு இராணுவக் கட்டுப்பாட்டிலுள்ள தமிழ்த் தாயகத்தின் பொங்குதமிழ் எழுச்சியானாலும், கடையடைப்பு என்றாலும், அரச எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் என்றாலும், இராணுவ எதிர்ப்பு நடவடிக்கையானாலும் ஒன்று திரண்டுவிடுவது ஒன்றே - அவர்கள் எந்த ஆட்சிக்குக் கட்டுப்பட்டு வாழ்கிறார்கள் என்பதை எடுத்துக்

**எஸ்.எம்.ஜி**

காட்டும்.

ரணில் தலைமையிலான ஐக்கிய தேசிய முன்னணியும், சந்திரிகா தலைமையிலான சிறிலங்கா சுதந்திரக்கட்சி இணைந்த பொதுஜன ஐக்கிய முன்னணியும் இவற்றுடன் இணையப் போகும் ஜே.வி.பியும் சேர்ந்து ஆட்சி அதிகாரத்திற்காகப் போராடலாம்.

இதில் தமிழ் மக்களையும் பகடைக்காய்களாகப் பயன்படுத்த முனையலாம். இனக்கலவரத்தைத் தூண்டிவிட்டு மீண்டும் பயங்கரவாதக் கூச்சலை எழுப்பி, இனஒழிப்பில் ஈடுபட முனையலாம். அதிகாரத்திற்கு அவர்கள் போட்டியிட்டுச் சிங்கள மக்களை ஏமாற்றட்டும். அது அவர்களுக்கு உள்ளே உள்ள போட்டி. தமிழ் மக்கள் தமது பாதுகாப்பிற்கும், சுதந்திரத்திற்கும், பட்டினியிலிருந்து தப்புவதற்கும், கௌரவமாக வாழ்வதற்கும், ஒரே தலைமை-ஒப்பற்ற தலைமையின்கீழ் - ஒன்றுபட்டுத் தாயகத்தைப் பாதுகாக்கத் திரண்டு நிற்பதே இன்றுள்ள ஒரேவழி.

தமிழ் மக்களைப் பிளவுபடுத்தும் எந்த முயற்சிக்கும் மக்கள் இடங்கொடுக்காமல், ஒன்றிணைந்து நிற்பதே அவசியம். இதன் மூலம், இன்று தமிழ்மக்கள் - பண்டாரநாயக்க கொள்கையைத் தோற்கடிக்கமுடியும். *

# ஈராக்கியத் தலைநகர் பக்தாத்தில் அமெரிக்கப் படை-மக்கள் மோதல்!

## இரு பொதுமக்கள், ஒரு படைவீரர் கொல்லப்பட்டனர்



வலுக்கிறது எதிர்ப்பு

ஈராக் தலைநகர் பக்தாத்தில் - அமெரிக்கப் படைகளுக்கும், அவர்களை எதிர்த்துவரும் ஈராக்கிய மக்களுக்குமிடையே, நேற்று நடைபெற்ற கலவரத்தில் - இரு ஈராக்கியர்களும்; அமெரிக்கப் படைவீரர் ஒருவரும் கொல்லப்பட்டனர்.

அமெரிக்கப் படையினருக்கு எதிராக - அவர்களது இராணுவ வாகன அணியொன்றின் மீது - ஈராக்கிய ஆர்ப்பாட்டக்காரர்கள் சிலர் கல்லெறிந்து தாக்கியபோது, கோபமடைந்த படைவீரர் ஒருவர் துப்பாக்கியால் சுட்டதில், ஈராக்கிய மக்கள் இருவர் உயிரிழந்ததாக அமெரிக்கா தெரிவித்தது.

முன்னாள் ஜனாதிபதி சதாம் ஹுசைனின் மாளிகைக்கு முன்பாகவே இந்தச் சம்பவம் நடைபெற்றது.

போருக்குப் பின்னரான விரக்தியும், வேலைவாய்ப்பின்மையும் ஈராக்கியரிடம் அதிகரித்து வருவதன் வெளிப்பாடே - இந்த ஆர்ப்பாட்டங்களும், எதிப்புணர்வும் என, அமெரிக்கத்தரப்புக் கூறுகின்றது.

இதேவேளை - பக்தாத் நகரிலுள்ள எரிபொருள் நிரப்பும் நிலையமொன்றில், தரித்துநின்ற அமெரிக்கப் படையினர் மீது நடத்தப்பட்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் - ஒரு படைவீரர் கொல்லப்பட்டதுடன், மற்றொருவர் காயமடைந்தார்.

நேற்றுப் பகல்வேளை இந்தச் சம்பவம் நடந்ததாக, அமெரிக்க இராணுவப் பேச்சாளர் தெரிவித்தார்.

இது இவ்வாறிருக்க - ஈராக்கியரிடமிருந்து ஆயுதங்களைக் களையுமுகமாக அமெரிக்கப்படையினர் மேற்கொண்டுவரும் 'தேள் நடவடிக்கையில்' இதுவரை - 400 பேர் கைதாகியிருக்கின்றனர்.

இவர்கள் அனைவரும் - சதாம் ஹுசைனின் ஆதரவாளர்கள் என, அமெரிக்கப் படையினர் தெரிவித்தனர்.



இந்தோனேஷிய அசே மாகாணத்தில், அரச படையினர் - தாம் கைதுசெய்த போராளிகளை விசாரணை செய்யும் காட்சி இது.

# ரஷ்யாவின் அதிநவீன கப்பலை இந்தியா கொள்வனவு செய்தது!



'ஸ்ரெல்த்' ரக அதிநவீன கடற்படைக் கப்பலை, ரஷ்யாவிடமிருந்து இந்தியக் கடற்படை கொள்வனவு செய்திருக்கிறது.

இந்தக் கப்பல் கொள்வனவு, முன்னமே நடைபெற்றிருக்க வேண்டியதாயினும், அக்கப்பலின் ரடார் மற்றும் தரையிலிருந்து விண்ணுக்குச் செலுத்தப்படும் ஏவுகணைகள் என்பவற்றின் பரிசோதனைக் கணிப்பில் தவறுகள் காணப்பட்டதால், இக்கப்பலை வாங்க இந்தியா பின்னடித்தது.

இதற்கான திருத்தப்பணிகள் யாவும் முடிவடைந்த நிலையில், சென். பீற்றர்ஸ்பேர்க் துறைமுகத்தில் வைத்து - இந்தியக் கடற்படை அதிகாரிகளிடம் இக்கப்பல் நேற்று கையளிக்கப்பட்டது.

'தல்வார்' என அழைக்கப்படும் இந்த யுத்தக்கப்பல், இந்தியக் கடற்படையின் வலுவை அதிகரிக்கும் என, இந்தியக் கடற்படையின் தலைமையதிகாரி அட்மிரல் மாத்வேந்திர சிங் தெரிவித்தார்.

இதுபோன்ற இன்னும் இரண்டு கப்பல்கள், ரஷ்யாவினால் இந்தியாவுக்கு வழங்கப்படவிருப்பது குறிப்பிடத்தக்கது.

உலகவலம்

### பிரெஞ்சு அரசைக் கண்டித்து

# தம்மைத்தாமே தீயிட்டு எரித்த ஈரான் பெண்கள்



எரிந்தவருக்கு முதலுதவி

பிரான்ஸில் தங்கியிருக்கும் ஈரானியர்களைக் கைதுசெய்வதற்காக, பிரெஞ்சுப் படைகள் நடவடிக்கை எடுத்துவருவதைக் கண்டித்து - பாரிஸில் இரண்டு ஈரானியப் பெண்கள் தம்மைத்தாமே தீவைத்து எரித்துள்ளனர்.

மார்சியே பபாகானி என்ற 40 வயதுப்பெண் - எரியக்கூடிய திரவமொன்றை தனது உடல்மீது ஊற்றிவிட்டு, தனக்குத்தானே தீமூட்டினார். முகம், மார்புப் பகுதியில் எரிகாயங்களுடன் - ஆபத்தான கட்டத்தில் இவர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

பிரெஞ்சு அரசின் உள்நாட்டுப் புலனாய்வுத் திணைக்களத்திற்கு எதிரில் கூடிய ஆர்பாட்டக்காரர்கள் மத்தியிலேயே இந்தச் சம்பவம் நடந்தது.

அவரைத் தொடர்ந்து செஜிகே மஜாவெரி என்ற இன்னொரு பெண்ணும் தன்னைத்தானே எரித்துக்கொண்டார்.

ஈரானியப் போராளிக்குழுவான முஜாஹுதின் அமைப்பைச் சேர்ந்தவர்கள் தாக்குதல்களை நடத்தலாம் என்ற காரணத்தால் - பிரான்சில் வசிக்கும் ஈரானியர்களை, அந்நாட்டுப் பொலிஸார் கைதுசெய்து வந்ததைத் தொடர்ந்து, அதனை எதிர்க்குமுகமாகவே இந்தச் சம்பவங்கள் நடந்துள்ளன.

இதேவேளை - ஈரானிலும் அரசாங்கத்துக்கு எதிரான ஆர்ப்பாட்டங்கள், கடந்த ஒருவாரமாக மிகப்பெருமெடுப்பில் இடம்பெற்றுவருவதும் குறிப்பிடத்தக்கது.

இந்த ஆர்ப்பாட்டங்கள் - அரசாங்கம் தனது மறுசீரமைப்புக் கொள்கையை ஒழுங்காகக் கடைப்பிடிக்கவில்லை எனக்கூறியே நடத்தப்பட்டு வருகின்றன.

# அமெரிக்கா அழுத்தம் தந்து வருமாயின் அணு ஆயுத உற்பத்தியில் கவனம் கூடும்!

## வடகொரிய வெளிநாட்டமைச்சர் எச்சரிக்கை

அமெரிக்காவின் அழுத்தம் தொடர்ந்தும் அதிகரித்து வருமாக இருந்தால் - தனது அணுசக்தி ஆற்றலை இன்னமும் வளர்த்துக் கொள்ளப்போவதாக -வடகொரியா எச்சரித்துள்ளது.

இந்த எச்சரிக்கையை, வடகொரிய வெளிவிவகார அமைச்சர், செய்தியாளர்களிடம் பேசும்போது தெரிவித்தார்.

இதேவேளை - எக்காரணம் கொண்டும் அணுஆயுதத் திட்டத்தை கைவிடப்போவதில்லை என வடகொரியா உறுதியாக இருப்பதாக - அந்நாட்டு அரசாங்க வானொலியும் நேற்று அறிவித்தது.

கம்போடியாவில் இடம்பெற்றுவரும் ஆசியான் நாடுகளின் மாநாட்டில் கலந்துகொண்ட வெளிவிவகார அமைச்சர்களிடம் - வடகொரியா தனது அணுஆயுத உற்பத்தியைக் கைவிடவேண்டுமென வற்புறுத்துமாறு, அமெரிக்க இராஜாங்க அமைச்சர் கொலின் பவல் தெரிவித்ததையடுத்தே - வடகொரியாவிடமிருந்து இந்த அறிவிப்புகள் வெளியாகியுள்ளன.

ஆசியான் மாநாட்டில் கலந்துகொண்டுள்ள ஜப்பான், சீனா ஆகிய நாடுகளும் - வடகொரியாவின் அணு ஆயுதத் திட்டத்துக்கு தமது எதிர்ப்பினைத் தெரிவித்துள்ளன.



ஆசியானுடன் பவலும்

ஆனாலும் - இதுவிடயமாக, ஆசியான் அமைப்பு வடகொரியாவிடம் பேசாது என்றே கருத்துத் தெரிவிக்கப்படுகிறது.

இது இவ்வாறிருக்க - வடகொரியாவின் அணுஆயுதத் திட்டம் பற்றியும், அதனது அச்சுறுத்தல் தொடர்பாகவும் - அமெரிக்க, தென்னாபிரிக்க மற்றும் ஜப்பான் நாடுகளின் பாதுகாப்புத்துறை உயரதிகாரிகள் - ஹவாய் தீவில் சென்ற வாரம் சந்தித்துப் பேசியிருப்பதும் குறிப்பிடத்தக்கது.

ஈராக் மீதான போருக்குப் பின்னர் அமெரிக்காவின் கவனம், வடகொரியாவின் மீது திரும்பியிருப்பதாக அவதானிகள் தெரிவித்தனர்.

### தன் நிலைப்பாடு சரியென்கிறார் ரொனி பிளேயர்!

பிரிட்டனின் நீதித்துறையில் முக்கிய மாற்றமொன்றைச் செய்ததால்- சிக்கலுக்கு ஆளாகியிருக்கும் பிரதமர் ரொனி பிளேயர், தான் செய்த மாற்றம் மிகச்சரியானதே என வாதிட்டிருக்கிறார்.

'லோர்ட் சான்ஸிலர்' என்ற பதவியை அவர் நீதித்துறையிலிருந்து இல்லாதொழித்ததால் - ரொனி பிளேயருக்கு எதிர்ப்பும், ஆதரவுமான சூழல் தோன்றியுள்ளது குறிப்பிடத்தக்கது.

# ஆப்கானில் மீண்டும் அமைதியீனம் ஏற்படக்கூடிய வாய்ப்பு அதிகரிப்பு!

## 80 சர்வதேச தொண்டர் அமைப்புக்கள் எச்சரிக்கை



ஓப்பியம் - ஆப்கானில் குடிசைக் கைத்தொழில்

ஆப்கானிஸ்தானில் மக்களிடையே அமெரிக்கப் படைகளுக்கும், சர்வதேச அமைதிகாப்பு வீரர்களுக்கும் எதிரான உணர்வலைகள் அதிகரித்துவருவதாகவும், முன்னர் இடம்பெற்ற தலிபான்களின் மத அடிப்படைவாத ஆட்சியே பரவாயில்லை என்ற சிந்தனை மேலோங்கி வருவதாகவும் - அங்கு பணியாற்றிவரும் 80 சர்வதேச தொண்டர் அமைப்புக்களும், ஐ.நா.பாதுகாப்புச் சபைக்கு கடிதம் எழுதியுள்ளன.

ஆப்கான் தலைநகர் காபூலைத் தவிர, நாட்டின் ஏனைய பகுதிகளில் பாதுகாப்பு சீரழிந்துவிட்டதாகவும்,

இடைக்கால அரசாங்கம் அமைக்கப்பட்டாலும், தேர்தல் நடத்தப்படவில்லை என்பதால் - மக்களிடம் ஆட்சேபம் கிளம்பியிருப்பதாகவும் அக்கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆப்கானிஸ்தானில், அல் - கொய்டா மற்றும் தலிபான் அமைப்புக்களை ஒடுக்குவதற்காக, 12,000 அமெரிக்கப் படையினரும், அவர்களுக்கு உதவுவதற்காக - 4,600 சர்வதேச அமைதிகாப்புப் படையினரும் அங்கு தங்கியுள்ளனர்.

இதேவேளை - தலிபான்களின் ஆட்சிக் காலத்தில் போதைப்பொருளான ஓப்பியம் உற்பத்தி - ஆப்கானில் மிகக் குறைக்கப்பட்டிருந்தது. ஆனால், தற்போது இந்தப் போதைப் பொருள் உற்பத்தி மிகப்பெருமளவில் ஆரம்பிக்கப்பட்டுவிட்டமையும் குறிப்பிடத்தக்கது.



பிலிப்பைன்ஸில், கடும் மழையால் ஏற்பட்டுள்ள வெள்ளப்பெருக்கு, இயல்பு வாழ்க்கையைப் பாதித்துள்ளது. ஒன்பது பேர் பலியாகியிருக்கின்றனர். வெள்ளம் சூழ்ந்த அங்குள்ள தெருவொன்றினைப் படத்தில் காணலாம்.

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# 'பொங்கு தமிழ்' ஏற்பாடு பற்றி பொது அமைப்புகளுடன் சந்திப்பு

## நாளை முதல் ஆரம்பமாகின்றது

யாழ்.பல்கலைக்கழக சமூகம் ஏற்பாடு செய்துள்ள, 'பொங்குதமிழ் நிகழ்வு' யாழ்.மாவட்டத்திலுள்ள அனைத்துப் பொது அமைப்புக்களையும் ஒன்றிணைத்து பெருமெடுப்பில் நடாத்தப்படவுள்ளது.

இதற்கான நடவடிக்கையில் பல்கலைக்கழக மாணவர்கள் ஈடுபட்டுள்ளனர்.

பல நூற்றுக்கணக்கான பல்கலைக்கழக மாணவர்கள், யாழ்.குடாநாட்டிலுள்ள மக்களை நேரில் சந்தித்து, 'பொங்குதமிழ்' நிகழ்வில் கலந்து கொள்வதற்கான அழைப்பை விடுத்துவருகின்றனர்.

இதன் ஒருகட்டமாக - அனைத்துப் பொதுஅமைப்புக்களின் பிரதிநிதிகளையும் பல்கலைக்கழக சமூகத்தினர் சந்திக்கவுள்ளனர்.

இதன்படி - தீவகத்திலுள்ள பொது அமைப்புக்களின் பிரதிநிதிகளுடனான சந்திப்பு - நாளை வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கு வேலணை பலநோக்குக் கூட்டுறவுச் சங்க மண்டபத்திலும்,

வடமராட்சியிலுள்ள பொது அமைப்புக்களுடனான கலந்துரையாடல் - அன்றைய தினம் மாலை 3 மணிக்கு நெல்லியடி மத்திய மகா வித்தியாலத்திலும் நடைபெறவுள்ளது.

மறுநாள் சனிக்கிழமை, தென்மராட்சி பொது அமைப்புக்களுடனான சந்திப்பு - காலை 10 மணிக்கு சாவகச்சேரி இந்துக்கல்லூரியிலும், வலிகாமம் பிரதேச பொது அமைப்புக்களுடனான சந்திப்பு - அன்றைய தினம் மாலை 3 மணிக்கு, மருதனார்மடம் இராம்நாதன் கல்லூரியிலும் நடைபெறவுள்ளது.

யாழ்ப்பாணம், நல்லூர் பிரதேச பொது அமைப்புக்களுடனான சந்திப்பு - ஞாயிறு காலை 10 மணிக்கு, யாழ்.பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நடைபெறும் என பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தினர் அறிவித்துள்ளனர்.

# ஜனாதிபதியின் கட்டுப்பாட்டின் கீழ் முப்படைகளும் வரப்பட வேண்டும்

## 4 ஆவது ஈழப்போருக்கு 'சிஹல உறுமய' எச்சரிக்கை

நான்காவது கட்ட ஈழப்போர்- விரைவில் மூழப்போகிறது என்றும் இதனால் முப்படைகளையும் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தனது கட்டுப்பாட்டில் கொண்டுவரவேண்டும் என சிஹல உறுமய கோரிக்கை விடுத்துள்ளது.

இது தொடர்பாக, ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுக்கு, சிஹல உறுமயவின் தலைவர் திலக் கருணாரட்ன அனுப்பியுள்ள கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது,

புலிகள் நான்காவது கட்ட ஈழப்போருக்கான தயார்ப்படுத்தல்களை மேற்கொண்டுள்ளனர். நாட்டின் தலைவி என்ற வகையில், முப்படைகளையும் கட்டுப்பாட்டில் கொண்டு வரவேண்டியது உங்களின் முக்கிய பொறுப்பாகும். உடனடியாக முப்படைகளைக் கட்டுப்பாட்டில் கொண்டுவந்து நான்காவது கட்ட ஈழப்போரை எதிர்கொள்ளத் தயாராக வேண்டும்.

இரண்டாவது கட்ட ஈழப்போர் ஆரம்பித்தபோது, புலிகளிடம் சரணடைந்த 628 பொலிஸார் கொல்லப்பட்டார்கள்.

புலிகள் இப்போது தமது இராணுவ பலத்தைப் பெருக்கிக்கொண்டு, மீண்டும் அடுத்த யுத்தத்துக்குத் தயாராகியுள்ளனர் என்றும் அந்தக் கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# வைத்தியர் வேலை நிறுத்தத்தால் தமிழ்ப்பெண் ஒருவர் உயிரிழப்பு!

(கொழும்பு)

வைத்தியர்களின் வேலை நிறுத்தத்தால், 28 வயது தமிழ் பெண் ஒருவர் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் உரிய சிகிச்சைகளின்றி உயிரிழந்தார்.

இச்சம்பவம் குறித்து, மேலும் தெரியவருவதாவது-

மாப்பாணன் காளிகாதேவி என்ற பெண், அவசர சிகிச்சைக்காக ஹொரண வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட போதும், வைத்தியர்கள் எவரும் சிகிச்சையளிக்க முன்வரவில்லை. ஒரு வைத்தியர் தற்துணிவின் பேரில் பரிசோதனைகளை மேற்கொண்டு ஸ்கான் செய்த பின்னர், மேலதிக சிகிச்சைக்காக கொழும்பு தேசிய வைத்தியசாலைக்கு நோயாளியை கொண்டு செல்லுமாறு கேட்டார்.

நோயாளியை கொழும்பு தேசிய வைத்தியசாலைக்குக் கொண்டு சென்ற போது, அங்கு வைத்திய சிகிச்சை அளிக்க மருத்துவர்கள் எவரும் முன்வரவில்லை. இதனால் நேயாளி இறக்கவேண்டி வந்தது.

# அமெரிக்க கலாசார விழா யாழில் நடத்த மும்முரம்!

## தூதரக உயரதிகாரி நேற்று இங்கு வந்துசென்றார்

(யாழ்ப்பாணம்)

அமெரிக்க தூதகரத்தின் அனுசரணையுடன், யாழ்ப்பாணத்தில் அமெரிக்க கலாசார விழாவொன்றை பெருமெடுப்பில் நடாத்துவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இதற்கான திட்டமிடல் வேலைகள்ளை கொழும்பிலுள்ள அமெரிக்கத் தூதரகம் ஏற்கனவே ஆரம்பித்துவிட்டது.

அடுத்தமாதம் பிற்பகுதியில், இவ்வாறான கலாசார விழாவை யாழ்ப்பாணத்தில் நடாத்துவதற்கு ஏற்ற திகதியும் தீர்மானிக்கப்பட்டிருப்பதாகத் தெரியவருகிறது.

இவ்விடயம் தொடர்பாக, யாழ்ப்பாணத்திலுள்ள களநிலைவரத்தை அறிந்துகொள்வதற்காக, நேற்று அமெரிக்கதூதரகத்தின் அதிகாரியான கோடி டெய்லர், உத்தியோகபூர்வ விஜயம் ஒன்றை மேற்கொண்டு யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்தார்.

இவர், யாழ்ப்பாணத்தில் பலவேறு தரப்புக்களையும் நேற்று சந்தித்து கலந்துரையாடினார்.

எனினும், இக்கலாசார விழாவை நடாத்துவதற்கு யாழ். அரச செயலகம் - இதுவரை பச்சைக்கொடி காட்டவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

# 'சுப்பர்லீக்' உதைபந்தாட்டம்

(யாழ்ப்பாணம்)

இலங்கை உதைபந்தாட்ட சம்மேளத்தினால் நடத்தப்படும் லீக்குகளுக்கிடையிலான 'சுப்பர்லீக்' போட்டியின் மூன்றாவது சுற்று ஆட்டம், இன்று மாலை 4 மணிக்கு உரும்பிராய் இந்துக்கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இப்போட்டியில் யாழ்ப்பாணம் லீக் அணியை எதிர்த்து மன்னார் லீக் அணி ஆடவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# கலாசார உத்தியோகத்தர் கூட்டம்

யாழ்.மாவட்டத்திலுள்ள பிரதேச செயலகங்களில் கடமையாற்றும் கலாசார உத்தயோகத்தர்களுக்கான கலந்துரையாடலொன்று, இன்று காலை 10 மணிக்கு, யாழ். செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்தில் சகல கலாசார உத்தியோகத்தர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு யாழ்.மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் பத்தினியம்மா திலகநாயகம்போல் கேட்டுள்ளார்.

# வடக்கு - கிழக்கில்...

உள்ளூராட்சி தேர்தல் தொடர்பான உச்சநீதிமன்றத்தின் இத் தீர்ப்பை, சபாநாயகர் நேற்று நாடாளுமன்றில் வெளியிட்டார்.

இத் தேர்தலுக்காக ஏற்கனவே தாக்கல் செய்யப்பட்ட வேட்பு மனுக்களை ரத்து செய்வது என்பது அரசியல் யாப்புக்கு முரணானது என்று உச்ச நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

அத்துடன் - உள்ளூராட்சி தேர்தல் தொடர்பான திருத்தச்சட்டம் நாடாளுமன்றில் நிறைவேற்றப்படவேண்டுமாயின், முன்றில் இரண்டு பெரும்பான்மையினரது ஆதரவுடனேயே மேற்கொள்ளப்பட வேண்டும் என்றும் - இவ்வாறு பெரும்பான்மைப் பலத்துடன் திருத்தச் சட்டம் நிறைவேற்றப்பட்டாலும், அது மக்கள் கருத்துக் கணிப்புக்கு விடப்படவேண்டும் என்றும் உச்சநீதிமன்றத் தீர்ப்புக் கூறுகிறது.

இத்தீர்ப்பையடுத்து தேர்தலை இரத்துச்செய்ய எண்ணியிருந்த அரசாங்கத்திற்கு, இப்போது அது முடியாமல் போயிருக்கிறது.

இதனால் - தேர்தலை இப்போதைக்கு ஒத்திவைக்கவும், பின்னர் தேர்தலை இரத்துச் செய்வதற்கான மாற்று ஏற்பாடுகள் குறித்து ஆராயவும் அரசு தீர்மானித்துள்ளது.

இவ்விடயம் தொடர்பாகப் பிரதமரும், அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் மற்றும் சிரேஷ்ட அமைச்சர்களும் மந்திராலோசனை நடத்திவருகின்றனர். மிக விரைவில் அரசியல் கட்சிகளுடனும் விடுதலைப் புலிகளுடனும் இவ்விடயம் குறித்துப் பேச்சு நடத்தப்பட விருப்பதாக அரசாங்கத் தரப்பில் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை - இறுதியாகக் கிடைத்த தகவலின்படி, வடக்கு - கிழக்கு உள்ளூராட்சிச்சபைத் தேர்தலை 6 மாதங்களுக்குப் பிற்போட தேர்தல் ஆணையாளர் தீர்மானித்திருப்பதாகத் தெரியவருகிறது. (200)

# மீன்பிடித்...

ரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இவ்விடயம் தொடர்பாக, கடற்தொழில், நீரியல்வள அமைச்சின் பணிப்பாளர் பியசேன, சகல மாவட்ட கடற்தொழில் திணைக்களங்களுக்கும் கண்டிப்பான பணிப்புரை வழங்கியுள்ளார்.

# பொங்கு தமிழ்...

கள், தொண்டர் அமைப்புக்கள், சர்வதேச அளவில் செயற்படும் தொழிற் சங்கங்கள் மற்றும் ஏனைய அமைப்புக்கள் ஆகியவற்றுக்கும் அழைப்புக் கடிதங்கள் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

# பருத்தித்துறை...

இவற்றைவிட, விசேட மோட்டார் சைக்கிள்களில் அங்குவிரைந்து வந்த இராணுவ அணியொன்று, பருத்தித்துறை நகரப்பகுதியைச் சுற்றிவளைத்து நின்றது. படையினரின மேற்படி நடவடிக்கை காரணமாக, அப்பகுதியில் பதற்றநிலை காணப்பட்டது.

# முப்படைத்...

நாட்டுமக்களின் பாதுகாப்பு ஆகியவற்றை உறுதிப்படுத்துவது அரசியல் சாசனத்தின் மூலம் தமக்கு அதிகாரம் இருப்பதை நன்குணர்ந்துள்ளதாக - படைத்தளபதிகளிடம் தெரிவித்தார். (01)

# இனியும் யுத்தநிறுத்த...

விடுதலைப் புலிகளின் கப்பல், சர்வதேசக் கடற்பரப்பில் கடற்படையால் மூழ்கடிக்கப்பட்ட சம்பவத்திற்கு விடுதலைப்புலிகள் தரப்பில் கடும் எதிர்புத் தெரிவிக்கப்பட்டது. இது போன்ற சம்பவங்களை இனியும் அனுமதித்துக் கொண்டு, மௌனமாக இருக்க முடியாது என-அரசியல்துறைப் பொறுப்பாளர் தமிழ்ச்செல்வன் நோர்வேக் குழுவினரிடம் உறுதிபடக் கூறினார்.

இதேவேளை- நேற்றைய சந்திப்பில், விடுதலைப்புலிகள் கோரும் அரசியல் - நிர்வாகக் கட்டமைப்பு பற்றி, புலிகள் தரப்பில் மீண்டும் வலியுறுத்திக் கூறப்பட்டதாகவும் தெரியவருகிறது.

இச்சந்திப்பு முடிந்ததும்-

காலை 11 மணியளவில் கிளிநொச்சியில் அமைந்துள்ள தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தின் நடுவப் பணியகத்திற்குச் சென்ற நோர்வே தூதுவரும் இரண்டாவது செயலாளரும், அங்கு தமிழர் புனர்வாழ்வுக் கழக அலுவலகர்களுடன் சிறு கலந்துரையாடலை நடாத்தியபின்னர், முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் இரு திட்டங்களையும் சென்று பார்வையிட்டனர்.

முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள வள்ளிபுனம் பகுதியில் அமைந்துள்ள கண்பார்வை மற்றும் காது கேளாத வர்களுக்கான இனிய வாழ்வு இல்லத்தையும் அவர்கள் சென்று பார்வையிட்டனர்.

தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தின் நிதியுதவியுடன் இயங்கும் வன்னியின் ஒரேயொரு செவிப்புலனற்ற மற்றும் விழிப்புலனற்றவர்களுக்கான பாடசாலையான இனிய வாழ்வு இல்லத்தில் 70 சிறார்கள் கல்வி பயில்வது குறிப்பிடத்தக்கது.

இதன் பின்னர், வள்ளிபுனம் பகுதியில் அமைந்துள்ள - போரினால் பாதிக்கப்பட்ட மற்றும் போரினால் பெற்றோர்களை இழந்த சிறுவர்களைப் பராமரிக்கும் இல்லமான பாரதி பெண்கள் இல்லத்தையும் நோர்வேக் குழுவினர் சென்று பார்வையிட்டனர். இங்கு 160க்கும் மேற்பட்ட பிள்ளைகள் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் நிதியுதவியுடன் பராமரிக்கப்படுவது குறிப்பிடத்தக்கது.

# நாணய மாற்று விகிதம்

மத்திய வங்கியின் சர்வதேச நடவடிக்கைப் பணியகத்தால் நேற்று வெளியிடப்பட்ட அந்நியச் செலவாணிகளுக்கான நாணய மாற்று விகித விவரங்கள் வருமாறு:-

| | கொள்வனவு விலை (ரூ.ச.) | விற்பனை விலை (ரூ.ச.) |
|---|---|---|
| 1 அமெரிக்க டொலர் | 96.98 | 97.37 |
| 1 ஸ்ரேலிங் பவுண் | 162.98 | 164.55 |
| 1 யூரோ | 113.90 | 115.31 |
| 1 சுவிஸ் பிராங் | 73.62 | 75.00 |
| 1 அவுஸ்திரேலிய டொலர் | 64.53 | 65.79 |
| 1 ஜப்பானிய யென் | 00.81 | 00.82 |
| 1 சவூதி றியால் | 25.92 | 25.92 |

யாழ்ப்பாணத்தில்
மீண்டும் மக்களுக்கான சேவையில்
DHL WORLDWIDE EXPRESS
இன்று மு.ப. 10.00 மணிக்கு
திரு.றொமேஷ்டேவிட்
(பணிப்பாளர், ஜோன்கீல்ஸ் ஹோல்டிங்ஸ் லிமிட்டெட)
வைபவ ரீதியாக திறந்து வைப்பார்கள்
200, கே.கே.எஸ்.வீதி,
யாழ்ப்பாணம்
தொ.பே.-2225461
தொ.நகல்-2225462
அன்புடன் வரவேற்கிறோம்.
TRANSWARE LOGISTICS
MACKINNONS TRAVELS
(சி-1094)

வேலையாள் தேவை
வேலையாட்கள் உடன் தேவை
கவர்ச்சிகரமான சம்பளம் வழங்கப்படும்
ரஹ்மான் ஹோட்டல்
226, கே.கே.எஸ் விதி,
யாழ்ப்பாணம். (385)

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 19.06.2003 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.